ந.வ.தர்மலிங்க செட்டி,

நஞ்சப்ப செட்டி,

இராசிபுரம், சேலம் ஜில்லா,

கைமுறை வைத்தியம்.

139

130

139

****

ஆர்.வி.தர்மலிங்க செட்டி

நஞ்சப்ப செட்டி

இராசிபுரம், சேலம்

****

— 1 —

Verification Completed
on 19-2-63
most of the prescriptions
may not be useful

O.N.
Manuscript books are
returned to
individual on
1.3.63.

29.11.62.

(1) வெள்ளி பற்பம்.

சிங்கி பாலில் சுத்த வெள்ளி ரூபாயை தகடு தட்டி நெருப்பில் காய்ச்சி 21 தடவை துவைக்கவும். அப்புறம் வெத்திலை ரசத்தில் வெண் குன்றி பருப்பு போட்டு இழைத்து பூசி உலர்த்தி இப்படியே தகடு கனம் சாந்து பூசி உலர்த்தி அப்புறம் மகிழம் பட்டை இடித்து நடுவில் புளியம் பட்டை வைத்து தகடு வைத்து அதற்கு மேல் மேற்கண்ட படி பட்டை தேங்காய்ப் பருமன் பொதிந்து ½கெசபுடம் போட்டு எடுக்க பற்பம்.

(2) வயிற்று வலி, அஜீரணம், பொருமல், பசி தீபனம், இவைக்கு லவங்கம் பலம்.1, தா தவ பலம்.1, வெள்ளை சாட்டறணை பலம்.1, சுக்கு பலம்.1, மிளகு பலம்.1, பனை கருப்பட்டி பலம்.5, இவைகளை லேகிய பதம் பண்ணி சுண்டைக்காய் அளவு ~~[illegible]~~

(3) நாகரணங்க செந்தூரம்.

நாகம் பலம்.1, தாம்பிரம், அயம், தங்கம், தாளகம் மனோசிலை வகைக் பலம்.¼, ரசம் பலம்.2, கெந்தி பலம்.2, வீரம், வெடியுப்பு, பூநீர் வகைக்கு விராகனெடை.2, இவை பொற்றலை கையான் தகரை ரசத்தில் 8 சாமம் அரைத்து பில்லை செய்து காய வைத்து ஆள் செய்த சீசாவில் போட்டு பலப்பக்கல் அடைத்து சீலை மண் செய்து உலர்த்தி மொடாக்குள் மணல் நிறைய போட்டு மேற்கண்ட படி புட்டி வைத்து கமலாக்கினி 8 சாமம் எரித்து எடுக்க செந்தூரம். செம்பில் 4-க் மேற்கண்ட செந்தூரம் 1 கொடுக்க இளகும். மறுபடி உருக்கி இது 1 வெள்ளி.4, உருக்கி பார்க்க வயது.7, இது 5 தங்கம். 1 கொடுத்து தகடு அடித்து பூங்காவி வைத்து 5 எருவில் புடமிட நல்ல பசுமை யாகும்.

(4) ரசமணி.

வாசனையுள்ள வெற்றிலை ரசம் படி.1/8, காட்டு வெங்காயம் ரசம் படி 1/8, ரசம் தோலா.3, பிடிக்கு படியான செப்பில் போட்டு வாய் மூடாமல் சட்டியில் மணல் கொட்டி மேற்கண்ட செப்பு வாய் தெரியும்படி உள் பொதிந்து அடுப்பேற்றி சட்டி வாய்க்கு சானக்கு சும்மா மூடி மேற்கண்ட செப்பிலிருக்கிற ரசப் சுண்டுகிற வரையில் எரிய விட்டு ஆறிய பின் யெடுக்க சரியான மணியாய் விடும்.

(5) ரசமணியும் செந்தூரமும்.

காட்டாமை வாயில் ரசம் பலம்.1, விட்டு சட்டியிலிட்டு வாய் மூடி சீலை மண் செய்து மயில் புடமிட வெண்ணையாகும். இத்துடன் சுத்தியான கெந்தி வெங்காரம் வகைக்கு விராகனிடை.1 கூட்டிஅரைத்து ஒட்டிவிட்டு பற்படாகம் சாள் செய்த கிராசம் கொடுத்து கடைந்து வரவும். செந்தூரமாகும்.

(6) ரசமணி.

கருங்கோழி முட்டையில் 22 விராகனிடை வாலை ரசம் விட்டு மெழுகினால் அடைத்து இந்த படி 5,10 முட்டைகள் தயார் செய்து கோழி அடையில் வைத்து வரவும். 21 நாள் ஆன பின் உடனே மறு கோழியை அடையில் வைத்து 22 வது நாள் எடுத்து பார்க்க மணிகளாய் விடும். இது பல தடவை செய்தது.

பாசாணக் கட்டு.

(7) பாசானக் கட்டு.

22 சேர் எருமை கொழுப்பு மொந்தையிலிட்டு பாஷானக் கட்டி பலம்.2, வைத்து வாய் சீலை மண் செய்து ½ கெசபுடமிட உருகி கட்டும்.

(8) அண்ட பாசான சுண்ணம்.

சிற்றண்டம் ஓடுகள் எருக்கம் பால் விட்டு அரைத்து பில்லை செய்து காய வைத்து ஓட்டிலிட்டு பக்க சீலை மண் செய்து 30 எருவில் புடம் இந்தப் படி மூன்று புடமிட சுண்ணமாகும். மேற்கண்ட சுண்ணம் பலம்.2, பாசானம் பலம்.1, ரசம் விராகன்.1, இவை எருக்கன் பாலில் அரைத்து பில்லை செய்து காய வைத்து ஓட்டிலிட்டு பக்க சீலை மண் செய்து முழுப்புடம் போட்டால் கடும் கார சுண்ணமாகும். வெள்ளீயத்தில் கொடுக்க நீர் வாங்கும். 1 ½ ரூபாய் எடை வெள்ளீயத்திற்கு 1 பணவெடை குரு சுத்தம்.

(9) தாம்பிர சுத்தி.

ஊற மாக காடி பலம் 8-ல் வெடியுப்பு, சாரம், பூநீர், வகைக்கு 1 விராகன் அரைத்து காடியிலிட்டு இப்படி மேற்கண்ட மூன்றும் மேற்கண்ட காடியிலும் அரைத்து தாம்பிரத் தகடுக்கு பூசி செகப்பாய் நெருப்பில் காய்ச்சி மேற்கண்ட காடியில் தலைக்கவும். 5 தரமான பின் உருக்கி பார். சரியான சுத்தியாம்.

(10) தருசு சுண்ணம்.

தருசை காடியை சுண்ணம்பில் வைத்து தாக்கவும். இப்படி 8 தரம் செய்ய சுத்தியான பின் கழுதை தும்பை இலை அரைத்து கவசம் செய்து சீலை மண் செய்து 10 எருவில் இட்டு எடுக்க சுண்ணம்.

(11) தருசு சுண்ணம்.

வீரம் பலம்.1, வாய் நீராலாட்டி ஒரு பலம் தருசு கட்டிக்கு பூசி வெய்யிலில் வைக்கவும். உலர்ந்த பின் மறு நாளும் பூசி ரவியில் வைக்கவும். இப்படி மேற்கண்ட வீரம் ஆகிற வரையில் 8 நாள் ரவியில் வைத்து எடுத்து பார்க்க தருசுக் கட்டி கடுங்கார சுண்ணமாகும். வீரத்துடன் முப்பு சேர்க்கவும். வீரம் பலம்.1, முப்பு விராகன்.1,

(12) தருசு சுண்ணம்.

வீரம் வாய் நீராலாட்டி தருசு கட்டிக்கு பூசி ரவியில் காய வைத்து ஓட்டிலிட்டு பக்க சீலை மண் செய்து மூன்று எருவில் 40 இடவும். அப்புறம் இதை அடியில் வருகிற ஜெயநீராலாட்டி பில்லை செய்து காய வைத்து ஓட்டிலிட்டு பக்க சீலை மண் செய்து 3 எருவில் புடமிட்டு பார்க்க சுண்ணமாகும்.

(12.a) ஜெயநீர்.

அபிரகம், வெடியுப்பு, பூநீர் இதை அரைத்து பீங்கானிலிட்டு பனியில் சாய்த்து வைக்க ஜெயநீராகும். அல்லது பெருமரபட்டை ரசம் விட்டு குழப்பி அது போல் பனியில் வைக்க ஜெயநீர்.

வெங்க செங்கல் தூள் சேர்த்து உப்புடன் அரைக்க உப்பு ஓடாது. வெடியுப்புக்கும் சேர்க்கவும்.

(13) உப்பு கட்டு.

வெடியுப்பு, சரியுப்பு, இந்துப்பு வளையலுப்பு மூங்கிலுப்பு சோற்றுப்பு அன்னபேதி பூநீர் இவை சமவெடை துத்தியிலை ரசத்திலும் அரைத்து பில்லை தட்டி காய வைத்து ஓட்டிலிட்டு பக்க சீலை மண்

செய்து 30 எருவில் புடமிட உருகி கட்டாகும்.

(14) உப்பு செந்தூரம்.

கரியுப்பு பலம்.1½, கெந்தி, சூதம், வகைக்கு விராகன் 1 கட்டி முட்டை வெண் கருவிலல் அரைத்து பில்லை செய்து காய வைத்து ஓட்டிலிட்டு பக்க சீலை மண் செய்து கெசபுடமிட இந்தபடி 10 புடமிட செந்தூரம். வெள்ளிக்கு 10-க்கு செந்தூரம் 1 தாக்க வயது 7 ஆகும்.

(15) வீரக் கட்டு.

சிறிய சொப்பில் வெள்ளாட்டு நல்லியின் மூளை தப்பி இதனுள் வீரக் கட்டியை வைத்து 5 எருவில் புடமிடவும். இப்படி 2,3 புடமிட உருகி மயாய் கட்டி விடும்.

(16) பாசானக் கட்டு.

பாசானக் கட்டி ஓட்டிலிட்டு வெள்ளை மந்தாரையிலையும் பூவும் கூட்டி இடித்து ரசம் பிழிந்து 4 சாமம் சுருக்கிட சன்று கட்டாகி விடும். மேற்கண்ட பூ அரைத்து விளாங்காய் பிரமாணத்தில் வைத்து சீலை மண் செய்து 25 எருவில் புடம் போட்டு வெண்மையாய் மலர்ந்து பற்பமாகும்.

(17) தாளக பற்பம்

தாளகம் பலம்.1, கட்டியை கோப்பையிலிட்டு கோழி சாவல் ரக்தம் நிறைய போட்டு அப்படியே பிரட்டி உருண்டையாக்கி அதே சேவல் இறக்கை வால் மயிர் தலை மற்ற மயிரில் இந்த உருண்டையை பிரட்டி உருண்டை போல் செய்து சீலை மண் செய்து 10 எருவில் புடம் போட பற்பம்.

(18) காக்கை வலிப்புக்கு.

வெப்பாலையிலை ரசம் தோலா.1, வெள்ளாட்டு பால் தோலா 2 கூட்டி காலையில் சாப்பிடவும். 3 நாள் புளி நீக்கவும். உடனே சுகம்.

நசியம்:- வசம்பு நீலி வேர், வெங்காயம் மூன்றும் சமன் சேர்த்து நசியம்.

தும்பை ரசம் மிளகு சேர்த்து நசியம்.

சூலை வயிற்று வலிக்கு.

பிஞ்சு கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், சுயார்ப் சீனி ~~பத்து~~ நமக்~~கன்~~ வகைக்கு தோலா.1, மேற்கண்ட பத்துநமக் தோலா ¼ இவை நாகப்பட்டை ரசத்திலல் நேகு அரைத்து சுண்டக்காய் பிரமானம் மாத்திரை செய்து இரண்டு வேளை 5 நாள் புளி நீக்கி சாப்பிடவும். சூலை ரோகம். வயிற்று வலி சுகமாகும்.

(20) உடம்பு வெளியாவதுக்கு.

தருசு கட்டிக்கு துணி சுத்தி பற்ற வைக்கவும். இப்படி 7 தரம். அப்புறம் இதை தேன் விட்டு மெழுகு போல் அரைத்து வைக்கவும். 1 குன்றிடை 1 வேளைக்கு ~~கொ~~ கொடுக்க ஆசனம் வெளியாவது சுகப்படும்.

பலகித வெள்ளைக்கு.

கஸ்தூரி மஞ்சள் தோலா.2, கார்போக அரிசி தோலா.2, நெல்லி கெந்தி தோலா.2, குதிரை சீரகம் தோலா.2, இவை சூரணித்து 3 பாகம் செய்து ஒரு பாகம் 29 பலம் தண்ணீரில் மண் கொட்டரவில் கலந்து சுமார் 3 மணி நேரவில் கலந்து பனியில் வைத்து காலையில் வடித்து சாப்பிட்டு ~~வெள்ளாட்டு~~ வெள்ளாட்டு மோரும் சோறும் சாப்பிட்டு அப்புறம் எதுவும் சாப்பிடலாம். காரம், புளி நீக்கி 3 நாளில்

புழுவுடன் விழுந்து சுகப்படும்.

(22) தாது புஷ்டிக்கு.

சீரகம் 1 துணியில் முடிந்து சுண்ணம் பூசி உலர்க்கவும். இப்படி 7 தரம் பூசி உலர்ந்த பின் சிம்டாவில் பிடித்து எண்ணெ விளக்கில் எரியும் திரி கொளுத்தி இதில் நெருப்பு போல் சுட்டு மேற்கண்ட சீரகம் வெண்மையான பற்பமாகி விடும். இதை எடுத்து வைக்கவும்.

வெள்ளாட்டு பால் தோலா, பசு நெய் தோலா.4, தேன் தோலா.3, கூட்டி இதில் மேற்கண்ட பற்பம் மாசா 1 கலந்து சாப்பிடவும். இந்தப்படி 7 நாள் இரண்டு நேரம் புளி நீக்கி மாமிசமுடன் சாப்பிட்டால் விந்து அதிகமாய் ஏற்பட்டு தாதுவிருத்தியாகும்.

(23) மூசுக்கு புண்ணுக்கு மூலாம்.

கற்பூரம் வகைக்கு தோலா.2, வெள்ள மெழுகு தோலா.10, வெள்ள வெங்காயம் படி.½ இவை தனித் தனி மை போல் அரைத்து பசு நெய் தோலா.6, கூட்டி இரும்பு பாணலில் காய்ச்சி கடைய மூலாம் ஆகும். இதை துணிக்கு தடவி ரணத்தின் மேல் போடவும். மூசுறு புண் ரணம் உடனே சுகப்படும்.

(24) தாளகசுண்ணம்.

சுத்தியால் தாளகம் கட்டி பலம்.1, அமுகனி இலை அரைத்து சீலை மண் செய்து 10 எருவில் புடம் போட பற்பமாகும். இதை பலவித காசரோகம் அனைத்தும் தீரும். வெகு நல்ல பாகம்.

(25) கந்தக பற்பம்.

வெள்ளத் தாமரைப்பூ ரசத்தினால் அமர் சால் கெந்தியை அரைத்து பில்லை செய்து காயவைத்து சிறு சின்னியில் வைத்து சீலை மண் செய்து 50 எருவில் புடமிட நல்ல பற்பம்.

பேய் ஓட்ட. X

முச்சூரியில் சாம்பராணியிட்டு உலர்த்திய தாள் செய்து நெருப்பில் போட பேய் ஓடும். முச்சூரில் கற்பூரமிட்டு குளிகைல பிறக்கி திரி கொளுத்த பேய் ஓடும்.

(26) தாளகம் பலம்.1, சாராயத்தினால் மைபோல் அரைத்து கடைசியில் 3 துளி வேலை யிலை ரசம் விட்டு அரைத்து அரை ரூபாய் அகலமுள்ள மெல்லிய பில்லை செய்து நன்றாக காய வைத்து நாயுருவி சாம்பல் 3 விரக்கடை சட்டியில் வைத்து மேலே பில்லைகளை அடுக்கி மேலும் சாம்பலும் அப்படியே போட்டு 2 மணி நேரம் நன்றாய் எரித்து ஆறிய பின் எடுத்து வைக்கவும்.

தேவையான போது 1 பில்லைக்கு சுண்ணாம்பு துளி சுத்தி 1 எருவில் புடம் போட்டு எடுத்து பார். வெண்மையான பற்பமாகும். இதனால் சகல சுவாச காசம் தீரும்.

பற்மா வெள்ளைக்கு.

பூரம் தேவையானது பவுடர் போல் அரைத்து பிரமதண்டு பால் விட்டு நன்றாக பிசைந்து பயிரில் பாதி மாத்திரை செய்து வைத்து ஒரு மாத்திரை அரை பலம் விளக்கெண்ணெயில் குழப்பி காலையில் 3 நாள் புளி நீக்கி பருப்பு கரி சேர்த்து சாப்பிட்டு 4வது விளக்கெண்ணெ ஸ்நானம் செய்யவும். நாள் விட்டு நாள் 3 நாள் ஸ்நானம் செய்ய ஒடு தணியும். 15 நாளில் எவ்வித வெள்ளையும் சுகப்படும். வெகு நல்ல முறை.

(28) பூரக் கட்டு.

பூரக் கட்டி பலம்.4 இது போல் பிரமதண்டி பால் தம்படி கனம் அப்பி சட்டியில் 1 வீசை கற்பூரம் நடுவில் வைத்து கொளுத்த கட்டாய் விடும். சகல வெள்ளைக்கும் வெள்ளையில் தீரும்.

(29) கருவங்க பற்பம்.

கருவங்கம் மெல்லியபில் உ தட்டி சிறுக கத்தரித்து பலம்.4 உரலில் இட்டு கருவேலன் கொழுந்தை இடித்து பிழிந்து எடுத்த ரசத்திரல் நல்லுய் இடித்து இதே கொழுந்து தேங்காய் பிரமாணத்தில் வைத்து சீலை மண் செய்து கெசபுடம் இட்டு எடுத்து கல்வத்திலிட்டு மேற்கண்ட ரசமும் உமி நீரும் சரியெடை கூட்டி இதை விட்டு அரைத்து பில்லை செய்து காய வைத்து அதே லேக்கியில் வைத்து சீலை மண் செய்து 50 எருவில் இட இப்படி இன்னொரு புடம் ஆக 3 புடமிட பற்பம். பிக்களை நாள் விராகன்.8, வெள்ளி விராகன்.1, கூட்டி உருக்கி மேற்கண்ட பற்பம் 4 குன்றிடை தாக்கு கீழே வைக்கவும். மறுபடி உருக்கி 2 குன்றிடை கொடுத்து மறுபடி உருக்கி 1 குன்றிடை தாக்கி எடுத்து கொள்ளவும்.

(30) தருசு செந்தூரம்.

தருசு கட்டி மாம்பாலில் 1 நாள் ஊற வைத்து எடுத்து கட்டியின் மேல் மாம் கோந்து அப்பி சின்ன கொட்டுவிலிட்டு பக்க சீலை மண் செய்து 11 எருவில் இட்டு எடுக்க செந்தூரம். வெள்ளி.7, தாம்பிரம்.3 கூட்டி உருக்கி மேற்கண்ட பற்பம் 1 தாய் 1 கூட்டி எடுத்து பார்.

(31) தருசு கட்டி காட்டாமணக்கு பாலில் 3 நாள் ஊற வைத்து பாலுடன் அடுப்பில் வைத்து மெதுவாக எரிக்கால் பற்பம்.

(32) பாசான பற்பம்.

பச்சை கடுக்காய் பிஞ்சை அரைத்து விளாங்காய் பிரமாணத்தில் பாசானக் கட்டியை வைத்து சீலை மண் செய்து 15 எருவில் புடம் போட பற்பம். இதை தேன் கபம் இருமல் சுவாக க்ஷயம் மந்தார காசம் தீரும்.

(33) தருசை பனங் கோவையிலை ரசம் விட்டு அரைத்து வில்லை கட்டி காய வைத்து அந்த இலையில் கவசம் செய்து புடமிட செந்தூரம்.

(34) தருசு செந்தூரம்.

தருசு கட்டிக்கு ஆலம்பால் அத்திப் பால் பிரம தண்டிபால் வெள்ளெருக்கம் பால் ஊர் கள்ளிப் பால் முறையே அப்பி உலர்த்தி மருதாணியிலை அரைத்து கவசம் செய்து சீலை மண் செய்து பக்க 3 சேர் காட்டெருவில் நெருப்பு செய்து இதில் வைத்து ஆற வைத்து கவசம் உடைக்காமல் வெள்ளாட்டு எருவில் நெருப்பு செய்து பக்கா 3 சேர் புழுக்கை நெருப்பில் வைத்து எடுத்து இப்படி 6 புடமிட கட்டும் செந்தூர வெள்ளி தாம்பிரத்தில் 1 அரிசியெடை கொடுக்க.

(35) ராமபாணத் தைலம்.

விளக்கெண்ணை படி.1, சதுரக் கள்ளி பால் படி.1, வெங்காயச் சாறு படி.1, வீரம் விராகன் .1, இவைகள் யாவும் கூட்டி சரியான பதத்தில் எரித்து எடுத்துக் கொள்ளவும். சகல நீர் கட்டுகளுக்கும் 1 தம்பிடி அளவு 3 நாள் கொடுக்க நீர்கட்டு, சூலை, 18 குன்மம் 8 நீர் ரோகம் 21 இவைகையான வியாதிகளுக்கு கொடுக்க இச்சா பத்தியம்.

36 மும்மூர்த்தி செந்தூரம்.

வீரம், பூரம், லிங்கம் வகைக்கு ரூபாய் 1 எடையில் இம் மூன்று சரக்குகளையும் ஒன்றாக சேர்த்து கட்டி கற்பூரத்தில் 3ரூபாயெடை எடுத்து பாதி கற்பூரம் வைத்து அதில் வைத்து மேலே கற்பூரம் வைத்து பொத்தி தீ வைத்து ஆறிய பின் எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து கொள்ளவும். அனுபானம்: ஜன்னி 13, சுரம், 64 வாதம் 80 பித்த தோஷத்தால் ஏற்படும் சகல பாண்டு க்ஷயம், சுவாச காசம், கப்வாதம், ஜன்னி முதல் யாவும் தீரும்.

பிரமாணம்:- 1 அரிசி முதல் 2 அரிசி தேனில் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

37 சிலந்தி அரையாப்பு நகசுத்தி புண் சுட்ட புண்ணுக்கு.

பச்சை வெட்டு பலம்.1, பூரம் தோலா.1 இவை இரண்டையும் ஒன்றாய் சேர்த்து தேங்காய் எண்ணெயும் பச்சை தண்ணீர் விட்டு நாலு மணி நேரம் விடாமல் அரைக்கவும். அதை எடுத்து பாட்டிலில் வைத்துக் கொள்ளவும். இக்களிம்பை குழந்தை பிறக்க கஷ்டப் படுகிறவர்களுக்கு ஒரு மெல்லிய துணியில் தடவி தொப்புளில் கீழாக தடவ குழந்தை பிறக்கும்.

38 வெள்ளை காக்கட்டான் எண்ணெய்.

வெள்ளை காக்கட்டான் வேர் பலம்.1, கடுக்காய் தோல் பலம்.1, அரிசி திப்பிலி பலம்.1, மிளகு பலம்.1, சுக்கு பலம்.1, விளக்கெண்ணை படி.½ கடுகு பதம். காலை மாலை ½அ எடை.

தீரும் நோய்:- மந்தார காசம், இருமல் வெட்டை. க்ஷயம் தீரும்.

39 பிளா முள்ளு புண்ணுக்கு.

செல்வலதி பாஷாணம் வெண்ணெய் அல்லது நல்லெண்ணை இவை சேர்த்து பற்று போட உகிரும். பால் 1 பாகம் வெண்ணை அல்லது நல்லெண்ணை, தேங்காய்.

40 அமிர் சூலகி அல்வா.

பசும் பால் 1 படி, அஸ்கா சர்க்கரை ¼ வீசை, லவங்கம் பலம்.1, கசகசா ¼ படி, ஈர வெங்காயம் 2 படி கோஷ்டம் 2 பலம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி வகைக்கு பலம்.1, தனி பசும் பாலில் வெங்காயத்தின் மேல் தோல் போக்கி பன்னில் வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். பசுவின் நெய் படி.¼, வேகவைத்த வெங்காயத் தையும் கசகசாவையும் வெண்ணை போல் ஆட்டிக் கொள்ளவும். மற்ற சரக்குகளை சூரணம் செய்து கொள்ள வேண்டும், பாணலில் பால் கொதிக்க விட்டு அஸ்காவை போட்டு அதன் பின் ஆட்டிய வெண்ணை போடவும். 5 நிமிஷம் சென்று சூரணம் போடவும். இறக்கிய பிறகு நெய் விட்டு கிளரவும். அல்வா பதம். நீரழிவு, வெகு மூத்திரம், சர்க்கரை ரோகம் தீரும்.

சிரங்கு, புண், பரை, கட்டிக்கு கரனை கட்டி அவைகளுக்கு 1 அவுன்ஸ் தேங்காய் எண்ணெய்க்கு 5 துளி நயிட் கேசடு தங்கத் திராவகம் விட்டு முக்கி புண்ணுக்கு போடும் போது கோழி இறகால் தொட்டு போடவும்.

மூலத்திற்கு 7 துளி சேர்த்து முக்கி லேபனம் போடவும். மூலம் கரையும்.

41 சிங்கி பற்பம்.

மான் கொம்பை பொடியாக நசுக்கி தண்ணீரில் ஒரு நாள் ஊர வைத்து எடுத்து உலர்த்தி தங்கேடு தளையை அரைத்து அகலில் தடவி சிங்கியை வைத்து மேலேயும் கவசம் செய்து சீல் செய்து கோழி புடம் போட பற்பம். அதை எடுத்து வாய்வு,

வெட்டை முதலியவைகளுக்கு கொடுத்த கீழ்கண்ட கிருதம் கொடுக்கவும். ஒரு பாணலில் பசு நெய் விட்டு கொதி வரும் போது. (Incomplete)

42 சர்க்கரை வியாதிக்கு.

நத்தி விரையை வறுத்து இடித்த சூரணம் படி.1, காட்டுக் கம்பு குத்தி தவுடு நீக்கி வறுத்து இடித்த சூரணம் படி.1, இந்த இரண்டையும் கலந்து கொள்ள வேண்டும். அதன் பின் நாவல் கொட்டை சூரணம் வேளைக்கு 1 பலம் எடுத்து ~~படிக்காதவர்கள்~~ கஷாயம் இறக்கி அதில் மேற்கண்ட கலந்த சூரணம் 1½ரூபாயெடை வாயில் போட்டு ~~[illegible]~~ கஷாயம் சாப்பிடவும். இம்மாதிரி காலை, மாலை 2 வேளை 1 மண்டலம் சாப்பிடவும். 2 மண்டல சாப்பிடவும்.

சர்க்கரை வியாதியஸ்தர் சிறுகீரை, தண்டன் கீரை, அரைக்கீரை, முளைக்கீரை சாப்பிடவும்.

43 குளிர் காய்ச்சலுக்கு.

கருஞ்சீரகம் பலம்.2, வேப்பம் மரத்து பட்டை நாள் இலை சமன் எடுத்து 1 படி தண்ணீரில் கஷாயம் செய்து 1/8 படியாக இறுத்து கொடுக்கவும்.

44 பேதி நல்லா. X

சக்மோனிய 1ரூபாயெடை எடுத்து நெய் விட்டு வறுத்து அரைத்த பவுடர் குல் கந்து 1 சேர் இவை இரண்டையும் நன்றாய் அரைத்து வைத்துக் கொள்ளவும். 1ரூபா யெடை முதல் 1 ரூபாயெடை சாப்பிட்டு பால், காபி, டீ, இட்லி, சாப்பிடலாம். இதை எடையில் ரச பற்பம் வைத்து கொடுக்கவும்.

45 பைத்திய வாய்வுக்கு மருந்து.

இஞ்சி பலம் கொண்டு சுத்த மேல் புறணி சீவிப் போட்டு எலுமிச்சம் பழச் சாத்தில் ஊறப் போட்டு இரும்பு வலரிசி பொடி பண்ணி சர்க்கரை ~~[illegible]~~ கூட கலந்து தினமொரு இஞ்சியாக 2 நேரம் சாப்பிட பயித்திய நோவு, அக்கினி மாந்தம் இது வெல்லாம் தீரும்.

46 இக்ரீ பல் ஒளில்.

கடுக்காய் தோல், காபுலி கடுக்காய் தோல் நெல்லி வத்தல், ரோஜா மொட்டு, வகைக்கு மிஸ்.கால் 10 இவை சூரணித்த பசு நெய் 10 மிஸ் கால் இட்டு பிசறி பாலில் சுத்தியான வாளம் மிஸ் கால்., போட்டு அரைத்து 8 தோலா அஸ்கா பாகு செய்து போட்டு கிளரி லேகியம் போல் எடுத்து வைத்து ¼, 1/8 தோலா சாப்பிட்டால் காலையில் இதனால் சகல மேகாதி மாக வியாதிகளும் தீரும். பேதியாகும். ,5,7, நாள் மிங்கால் என்பது காலை அரைக்கால் ரூபாயெடை அறியவும். ½,1 தோலா சாப்பிட்டால் வாந்தி பேதி நின்று விடும்.

47 ஜவாரிஷ் ஜன்ஜபில்.

மாவு சுக்கு பலம்.2, கருவேலன் கோந்து, ஏலம் விரை வகைக்கு பலம்.½, ஜாதிக்காய் .1, குங்குமப்பூ தோலா.¼, நிஷாதாபூ பலம் ½ இவை சூரணித்து 13 பலம் சீனி பாகு செய்து மேற்கண்ட சூரணம் இட்டு கிளரி ½,1, தோலா சாப்பிடவும். 5,7 நாளில் கிராணி பேதி, வாந்திரியா மேகா குடல் சோபு இதுகள் தீரும்.

ஜவாரிஷ் ஆமிலா.

30.11.62. Unani recipe

ஜவாரிஷ் ஆமிலா.

நெல்லி கிரம்.5, அகர்மஸ்தகி வகைக்கு கிரம்.3, இவை சூரணித்து சமாக்காகு தோலா 1 தண்ணீர் விட்டு பிசறி தண்ணீல் பாம்.1 எலுமிச்சம் பழம் ரசம் பலம்.1, சீனி பலம் 6 கூட்டி கிமாமில் மேற்கண்டவை செய்து போட்டு கிளரி ஜவாரிஷ் செய்து ½,1 தோலா சாப்பிட்டால் வாந்தி பேதி நின்று மேகா[illegible]காதி மாக தாகத்தாகும். தாது உண்டாகும்.

அயாரீ ஹபிக்ஜ்.

X சூசும் விரை பருப்பு தோலா.½, குங்குமப் பு தோலா.¼ மெல்சர் தோலா 6 இவை தண்ணீரில் அரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து வேளைக்கு 1 சாப்பிட்டு வர மலபந்தம் தீரும். பசியாகும்.

நுகஊக் கிரந்திக்கு.

X லவங்கம், பூரம், பிர்காங் சிங்கு வகைக்கு பலம்.½, அரைத்து 15 பொட்டலமாக்கி காலையில் 1 வாயிலிட்டு தண்ணீர் சாப்பிடவும். கடலை அல்லது அவரை ரொட்டி அல்லது பசும்பால் சோறு சாப்பிடவும். உப்பு கூடாது. கடும் பத்தியம் 14 நாள் இதனுள் சகல கிரந்தி சகல பவுந்திரம் முகரு புள் பலவித ரணமும் சுகப்படும்.

கவாய அலக்.

X கிராம்பு, கோரைக் கிழங்கு, சோரி, ஓமம் லீக் அதாவது நெல்லிகாயின் ரசம் உலர்த்தியது வகைக்கு தோலா.1, அபீம் தோலா ½, இவை தண்ணீரில் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை செய்து 1 மாத்திரை கொடுக்க பேதி, வாந்தி அஜீரண பேதி நிற்கும்.

சுர சூரணம்.

✓ அதிமதுரம், அரிசி திப்பிலி, சிக்கிர மூல வேர் பட்டை வகைக்கு மாசா.3, லாஊரீரி உப்பு, ஓமம், சுக்கு, மிளகு, புதினா வகைக்கு மாசா 6 ரோஜா மொக்கு தோலா.1, இவை சூரணித்து தோலா.¼ தேனில் கலந்து சாப்பிடவும். 3,5 நாள் அஜீரணம்சுரம் வாந்தி இருமல் முதலியன தீரும்.

(48) பிள்ளைகளுக்கு பக்க நோய் மாத்திரை.

வெங்காரம் பொரிக்கை, கடுகு பொரித்தது சமஎடை. வெள்ளாட்டுப் பால் அல்லது சுடு தண்ணீரில் அரைத்து கம்பு பிரமாணம் மாத்திரை செய்து 1.2, முலைப்பாலில் கொடுக்கவும். 3 நாள் கொடுக்க பிள்ளைகளுக்கு சுரம், பக்க நோவு, இருமல் தீரும். குழந்தை ரொம்பவும் ~~[illegible]~~ பருப்பு கீரை இலை ரசம் துணியில் நனைத்து தலையில் போடவும். பாகாம் எண்ணெயில் தேன், மெழுகு 4 குன்றிமணிடையும் கொத்தமல்லி இலை ரசம் 3 துளி விட்டு காய்ச்சி நெஞ்சில் போட்டு பூசி உடனே சுகப்படும்.

இருமலுக்கு மாத்திரை.

எருக்கிலை 21 ஒடித்து அதன் பால் பிடித்து அரை தோலா அபினியில் இட்டு அரைத்து மேற்கண்ட இலை 21-க்கும் ஒரு புறம் தடவி அடுக்காய் அடுக்கி துணி சுத்தி அடுப்பு சூழியில் வைத்து நெருப்பில்லாமல் சாம்பல் மூடி வைத்து காலையில் எடுத்து மேற்கண்ட படி இலை அரைத்து கடலை பிரமாணம் மாத்திரை செய்து இரண்டு வேளை

நாள் புளி நீக்கி சாப்பிட்டால் சீதள இருமல் சகலமும் தீரும்.

50 3 வித ~~பத்மம்~~ வியாதிக்கு. பர்மா

வெரிசி, கம்பி பொட்டுலுப்பு வகைக்கு தோலா 1½ அரைத்து 6 பொட்டலம் கட்டி 6 வேளை 3 நாள் சாப்பிட்டு தண்ணீர் குடிக்கவும். கடும் பத்தியம். கிழடி கேழ்ரா சாப்பிடவும்.

நாலாவது நாள் சோறு வடித்து கஞ்சி சாப்பிடவும். அப்புறம் பத்தியம் விடவும். இதனால் பலவித பத்மா எரிவு சிவடிதல் முதலியது தீரும்.

கம்பி செடியுப்பு ரேவல் சின்னி வகைக்கு மாசா. 7, சவக்காரம் அல்லது சோடா மாசா. 6, சீரகம் மாசா 3½. இவை தூளித்து சரியெடை சீனி கூட்டி 7 மாசா ~~[illegible]~~ வாயிலிட்டு தண்ணீர் சாப்பிடவும். இரண்டு வேளையும் கடும் பத்தியம். இதனால் முட்டு குட்டு வியாதி பலவித பத்மா வியாதி எரிச்சல் கல் சதை அடைப்பு சகலமும் சுகப்படும்.

7 மாசா * 1½ கிராகள்.

51 மூலவியாதிக்கு மாத்திரை.

புசலை, மாதுளம் தோல் வேப்பம் வேர் பட்டை இவை சமனெடை கக்ரேந்தா யிலைரசத்தில் அரைத்து பட்டாணிப் பிரமாணம் மாத்திரை செய்து காலையில் 1 மாத்திரை வீதம் சாப்பிடவும். 7, 11 நாள் நல்ல கொழுப்பு கொழுத்த கறி ~~[illegible]~~ சாப்பிட்டால் இதனால் பலவித ~~[illegible]~~ மூல வியாதி சுகப்படும்.

52. காலரா மாத்திரை.

எருக்கன் வேர் பட்டையும் மிளகும் சமன் எடை எடுத்து இஞ்சி ரசத்தினால் அரைத்து பட்டாணி பிரமாணம் மாத்திரை செய்து வாந்தியும் பேதியும் ஆக ஆக 1.1 கொடுத்து வந்தால் உடனே வாந்தி பேதி சுகமடையும்.

இம்சாக் மாத்திரை.

கஞ்சா மாசா. 1, அபினி மாசா. 4, மஸ்தகி, பூங்காவி, லிங்கம் அக்கிரா காரம் வகைக்கு மாசா. 3, இவை நேக அரைத்து தேன் விட்டு பட்டாணி பிரமாணம் மாத்திரை செய்து சாயந்திரம் 1 சாப்பிட்டு பசும்பால் குடிக்கவும். பால் சாதம் தான். ஸ்திரீயுடன் கூடிப் பார் தெரியும். அதிக பலம்.

இம்சாக் குளிகை.

புளியங் கொட்டை தண்ணீரில் ஊற வைத்து காலையில் தோல் போக்கி பருப்பு மாத்திரம் இதற்கு சரியெடை கல்கண்டு கூட்டி அரைத்து பூலாங் கொட்டை பிரமாணம் மாத்திரை செய்து நாளுக்கு மூன்று முறை பால் சேர்த்து சாப்பிடவும். போகம் செய்து பார். எலுமிச்சம் பழம் மாத்து.

இம்சாக் கோலி.

சமுத்ரா விரை அக்கிரா காரம் கல்கண்டு இவை சரியெடை தண்ணீரலரைத்து சுண்டைக் காய் பிரமாணம் மாத்திரை செய்து 5 மணிக்கு 1 மாத்திரை சாப்பிட்டு புளி நீக்கி பால் சாதம் சாப்பிடவும். அப்புறம் ஸ்திரீயுடன் கூடிப் பார். எலுமிச்சம் பழம் மாத்து இல்லாவிடில் விந்து கழலாது.

53 சுப சுரத்துக்கு.

சிறு நாகப்பூ அரைத்து வைக்கவும். 3 மாசா வாயிலிட்டு தண்ணீர் சாப்பிடவும்.

இரண்டு நேரம் 3 நாள் அரிசி கஞ்சி சாப்பிட்டு வர சப் சுரம் உடனே சுகப்படும்.

மூச்சுலம்.

திருசு மாசா 20, காளகம் மாசா 40, சிப்பி சுண்ணம் மாசா 60, இவை குமரி ரசத்திலே அரைத்து 4 சாமம் பில்லை தட்டி அகலில் வைத்து சீலை மண் செய்து கெசபுடமிட்டு அரைத்து எடுக்க பற்பம். இவை குன்றிடை பனை வெல்லத்தில் 2 வேளை 3 நாள் பால் கஞ்சி கூள் சாப்பிட்டு வர பலவித சுரமும் உடனே தீரும்.

பித்த சுரங்களுக்கு.

கசகசா பலம்.1, அரைத்து பால் கடித்து குடிக்கவும். காலையில் மாத்திரம் 3 நாள் கரி பால் சாப்பிடவும். இதனால் பித்த சுரம் சகலமும் சுகப்படும்.

கப்ப கஷுட மாத்திரை.

கருஊமத்தை விரை தோலா.4, மோசில் பிசின் சுக்கு வகைக்கு தோலா.8, கதிரு மாசா.3, கிராம்பு மாசா.4, சாதிபத்திரி மாசா.2, குங்குமப்பூ மாசா.2, இவை குரனித்து தண்ணீரில் அரைத்து கிழ பிரமாணம் மாத்திரை செய்து இரண்டு நேரம் 3 நாள் ஷேர்பா சோறு இதனுல் 3 முறை 4 முறை சுரம். இன்னும் பல வித சுரமும் இருகுலா வியாதியும் சுகப்படும்.

ஓம ஜுரித் தைலம்.

எருக்கிலேயும் ஓமமும் சுட்டி குளித் தைல மிறக்கி தேவையான லவங்கம் போட்டு வைக்கவும். 1 லவங்கம் சாப்பிட ஜன்னி தீரும். தைலம் வெத்திலேயில் தடவி சாப்பிட தாது விருத்தியாகும்.

ஜவாரிஷ் பலா நாலி. unani

திரை கிர்மாணிர் ஏத்தாப் இலை மிளகு பப்படு காரம் அல்லது சோடா அல்லது சவ்கார் இந் நான்கு திரவம் சரிஎடை இடித்து சல்லடையில் சலித்து சூரணம் செய்து இதுக்கு 3 எடை தேனில் கலந்து ஜவாரிஷ் செய்து கால அரை தோலா இரண்டு நேரம் 7,9,11, நாள் சாப்பிட்டால் மேகாலில் தாகக்காகும் ஜீரணம், பசி யாகும். புளி யேப்பம் நின்று விடும். மா அக்காலில் பெரிய டகாற் கோழை விக்கல் உடல் வலி அஷ்ட வாய்வு ரியா எய்து காத்த காய்ச்சி பரியும். பெகியில் சாதம் வந்து விழுவது அஜீரணம், பேதி வயிற்று வலி, மலபந்தம் சில சில போல் பல் கபிசல் நாவி சுரம் சுகப்படும்.

சீதள மாத்திரை. unani

வெள்ளுபி கிழங்கு கிராம்.1, கிராம்பு திரம்.1, மிளகு திரம்.14, இவை நமக்கி நெய்யில் கருப்பாய் பொரித்து துடைத்த அரைத்து பயறு பிரமாணம் மாத்திரை செய்து காலையில் 1 சாப்பிடவும். 3 நாள் இதனால் கை காலில் ரொம்பவும் ஒழுகும்படியான வேர்வையும் தீரும். இதனால் மேற்கண்ட நெய் ஆறாவுக்கு தீலா செய்த வெத்திலேயில் தடவி சாப்பிடவும். இதனால் தாது விருத்தி பெலம் அதிகம் ஆகும்.

திலாஜாலினூஸ்.

பசு வெண்ணெ, வெள்ளெருக்கம் பால் வகைக்கு தோலா ½, இரண்டும் நன்றாக மிஸ்ரமித்து ஆறாவுக்கு பூசி வெத்திலேயில் வாழ் கட்டவும். காலையில் சுடு தண்ணீர் பால் கழுவவும். அப்புறம் கொப்பளமாகும். நெய் தேங்கா எண்ணெ தடவினால் ஆறி ரொம்பவும் பலம் உண்டாகி முருக்கு ஏறும்.

கடலை காதை.

பச்சைக் கடலை தோலா 1½ 3 பலம் தண்ணீரில் ஊற வைத்து கடலை மாத்திர அரைத்து சாப்பிட்டு மேற்கண்ட கடலை ஊறின தண்ணீரில் 1 தோலா தேன் விட்டு கல முடிக்கவும். 7 நாளில் மாமிசம் சாப்பிடவும். ஆஜா அப்படியே நீரும் படியான பலமாகும்.

கனகலிங்க மாத்திரை.

உலாந்த லிங்கம் கட்டி பலம். 1-க்கு மேற்கண்ட கட்டிக்கு தங்க ரேக்கு தே 1 வை சுற்றி தண்ணீர் ஊற்றிய தேங்காய் பட்டியில் போட்டு நூலினால் நன்றாய் கட்டி முடாவில் வைத்து 14 படி பசும் பால் விட்டு அடுப்பேத்தி இது சுண்டி கல்வா ஆசிற பக்குவத்தில் இறக்கி மேற்கண்ட லிங்கம் தேன் விட்டாட்டி சிறு பயறு பிரமாணம் மாத்திரை செய்து இரண்டு நேரமும் 1 மாத்திரையாக 7 நாள் சாப்பிடவும். நல்ல வெள்ளாட்டு மாமிசம் சாப்பிடவும். புளி நீக்கி சாப்பிட்டால் அதிக காதை விருத்தியாகும். பலம் சாஸ்தியாய் விடும்.

சோபை மாத்திரை.

சுத்தி செய்த நவச்சாரம், ரேவல் சின்னு பால் இரண்டும் சமனெடை தண்ணீரி அரைத்து பட்டாணி பிரமாணம் மாத்திரை செய்து இரண்டு வேளை 5 அல்லது 7 நா சோம்பு திராவகத்தினுல் சாப்பிட்டு தண்ணீருக்கு பதில் திராவகமே சாப்பிடவும். இத னுல் சகல காமாலை சோகை வீக்கம், மகோதரம் பெருவயிறு சுகப்படும். உப்பு வறுத்தும் புளி கூடாது. பருப்பு ஆகும்.

சோபைக்கு கஷாயம்.

2 கொசந்தியிலை தோலா. 2, மிளகு 14 அரைத்து சோம்பு திராவகத்தில் கரை த்து வடித்து காலையில் குடிக்கவும். 3,5 நாளில் சகல வீக்கம் சோபை காமாலை தீரும். ரொம்பவும் பசியாய் விடும். புளி கூடாது. கரி கூடாது.

காமாலை வீக்கத்திற்கு.

சோம்பு திராவகம் பலம். 4, இதில் சாட்டறணை வேர் தோலா 2 நறுக்கி போட்டு அரை வீசை கஷாயம் இறக்கி சாப்பிடவும். சகல வீக்கம் காமாலை சோபை தீரும்.

பொய் கற்பம் பெருவயிறு குதக வாயுவு திரி.

3 பலம் படிக்காரம் ஓட்டிலிட்டு உருகும் போது கஸ்தூரி மஞ்சள் தூள் தூவி குழம்பாகிற சமயம் பிசறி கட்டு குளாவில் ஊத்தி ஆற வைத்து வைக்கவும். ஒரு கம்பி யோனியில் செலுத்தி இரவு முழுவதும் வைத்து காலையில் எடுத்து விடவும். இப்படி 3 நாள் செய்ய உதிரம். வந்து விடும். பெருவயிறு கரையும். பொய் கெற்பம் நீங்கும்.

சொறி சியாழம்.

கருவேலன் இலை பிடி. 1, ஒரு படி தண்ணீரில் நசுக்கி போட்டு கொதிக்க வைத்து சுண்டி 1 ஆழாக்கு காலையில் குடிக்கவும். இப்படி 9 நாள் சாப்பிட்டால் மேக சொறி தீரும். சகல மூல ரோகமும் சுகப்படும்.

கடலை தைலம்.

பச்சைக் கடலை படி. 1, மொந்தையிலிட்டு குழித் தைலம் இறக்கி வைக்கவும்.

இதை வெத்திலையில் கடவி இரண்டு வேளை 7 நாள் சாப்பிட்டால் விந்த ~~விருத்தியாகும்~~. தாது புஷ்டியாகும்.

மாந்தம் சுர மாத்திரை.

கருவேலன் பிசின் அதிமதுரம் பாதாம் பருப்பு கசகசா நிஸாஸ்தா அவரை பருப்பு, இவை சமனெடை சுடு தண்ணீர் தெளித்து அரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து இரண்டு நேரம் 3,5 நாள் சாப்பிட்டால் இதனால் சகல மாந்த பேதி சுரம் சீத ரத்தம் விழுவது உடனே சுகப்படும்.

சியா மாத்திரை.

2 படி பசும்பாலில் 1 பலம் வாளமும் 1 தோலா பொட்டலுப்பும் போட்டு சுண்டி பின் வாளம் எடுத்து தோலா.1, ரோஜா மொக்கு தோலா.$\frac{1}{2}$, கதிரு தோலா.$\frac{1}{2}$, இவை சோம்பு கியாழத்தில் அரைத்து பயறு பிரமாணம் மாத்திரை செய்து 1,2,3 சாப்பிட சுரம், கபம், குலுஞ்சு, வயிற்று வலி, தீரும். பேதியாகும்.

உறப்பா மொகில்.

பிஞ்சுக் கடுக்காய் கபாலி கடுக்காய், மஞ்சள் கடுக்கா, தானிக்காய், நெல்லிக்காய், மொகில் பிசின் வகைக்கு தோலா.1, கந்த நாபில் ரசம் அல்லது பன்னீர் விட்டு அரைத்து பட்டாணி பிரமாணம் மாத்திரை செய்து இது 1 தரம் தண்ணீரில் சாப்பிடவும். இதனால் இடுப்பு வலி மூலம் வயிற்று வலி சுகப்படும்.

மூபர்றய அஉறமதி.

குலாப்பு சந்தனம், தபாஉஷீடா ஆமீலா, தனியா வகைக்கு பலம்.1, சூரணித்த சீனி பலம்.12, பன்னீர் பலம்.5, ல் கியாழம் செய்து மேற்கண்ட சூரணமிட்டு கிளறி வைத்து அரை அல்லது 1 தோலா இரண்டு நேரம் 7,9,11 நாள் சாப்பிட்டால் சூடு, தலைவலி, சூடு இருமல், மலபந்தம், தாகம் வாந்தி ஒக்காளம் உறவலத்தில் மேதாவில் தாகத்த ஆய் விடும்.

புளிப்பு மாத்திரை.

பொபிதா கிழங்கு, சுக்கு, புதினா பாச்சு நமஜ்க், மிளகு வகைக்கு தோலா.1 நவச்சாரம் மேற்கண்ட தோலா.$\frac{1}{4}$, இவை நாலு எலுமிச்சம் பழ ரசத்தில் அரைத்து சிறு சுண்டைக்காய் பிரமாணம் மாத்திரை செய்து 1.2 கொடுக்க வாந்தி பேதி அஜீரணம் வயிற்று வலி தீரும். பசியாகும்.

இங்கிலிஷ் உப்பு முறை.

ப்பிரியட் கோய் நஸ்ட்றஸ் என்பது 3 கிரேன் 1 அவுன்ஸில் தண்ணீரில் இட்டு குடிக்கவும். வியாதிகாரருக்கு சீதளமிருந்தால் டின்சர் நக்சுவா மிகா 4 துளி அதில் போட்டு கொடுத்து வர சுரத்தினால் அஸ்தி, ஜுரபு, இளைப்பு, ஆயாசம் கிருகிருப்பு ,57 நாளில் சுகப்படும்.

கடுக்கா தோல்.

யெல்வாசகு தரி வகைக்கு தோலா.1, சக்மூனியா மாசா.3, குலாப்பூ மாசா .3, இவை தண்ணீரில் அரைத்து பட்டாணிப் பிரமாணம் மாத்திரை செய்து இதை 1 கிராம் எடை காலை, மாலை சாப்பிடவும். 5,7 புளி கூடாது. இதனால் திமிர் சிறங்கு புண் கண்ணோவு கண் சிவப்பு தண்ணீர் ஒழுகல் தீரும்.

வங்க தங்க பற்பம்.

கருவங்கம் பலம்.1, லிங்கரசம் பலம்.1, மூலாதாரம் படிக்காரம் பலம்.1$\frac{1}{2}$ தேய்வு வெடியுப்பு பலம்.1, பிரிதி கல்லுப்பு பலம்.1$\frac{1}{2}$, அப்பு சாரம் பலம்.$\frac{1}{2}$, வங்கமும் ரசமும் தொந்தித்து வெட்டை செய்து அதை எடுத்து கல்வத்திலிட்டு மற்ற சரக்குகளையும் கூடப் போட்டு சுண்ணம்பு தெளிவு நீர் விட்டு அரைத்து அரைப்பு 1½ சாமம் அரைத்து கல்வத்துடன் வெயிலில் வைக்க நீர் வாங்கும். அதன் பிறகு வில்லை தட்டி வெயிலில் 3 நாள் காய வைத்து சீலை மண் 7 செய்து 50 அல்லது 75 விரட்டியில் புடம் போட்டு எடுக்க தங்க நிறம் பற்பம். உப்பு சத்து இருந்தால் மறுபடியும் தெளிவு நீர் விட்டு அரைத்து வில்லை செய்து முன் போல் புடம் போட பற்பம். அதை மூளையைக் கொண்டு வேலை செய்து கொள்ளவும்.

இன்னொரு முறை.

முன்னால் கூறப்பட்ட பற்பம் சரக்குகளோடு தாளகத்தை 1 பலம் எடுத்து கூடச் சேர்த்து ~~ஐந்~~ பனங்கள் விட்டு அரைத்து புடம் போட்டு ~~கிரியா பார்க்க,~~ அல்லது சுண்ணம்பு தெளிவு நீர் விட்டு அரைக்கவும்.

ரசக்கிரியா.

கெந்தி பலம்.1, படிக்காரம் பலம்.1, கல்லுப்பு பலம்.1, சாரம் பலம் வெள்ளைப்பாஷாணம் பலம்.1, இவைகளை தாள் செய்து பதங்கம் எத்தவும். அப்ப தங்கத்தை எடுத்து ரசத்தில் மேற்கண்டபடி பதங்கத்தை கொடுத்து பிழைக்க ~~வெள்ளை~~ யாகும். அவ்வெள்ளையை உருக்க வெள்ளியாகும்.

அண்ட மெழுகு.

கோழி முட்டை நாலு எடுத்து உடைத்து ஒரு நீங்கலாக சமூலகமும் ஒரு கலை தில் ஊற்றி 15 எலுமிச்சம் பழ சாறு விட்டு அத்துடன் கீழ் காட்டிய படி வீரம் பல $\frac{1}{4}$, பூரம் பலம்.$\frac{1}{4}$, சாரம் பலம்.$\frac{1}{4}$, படிக்காரம் பலம்.$\frac{1}{4}$, மேற்கண்ட நான்கு இனங்களை நன்றாய் தாள் செய்து மேற்கண்ட கலயத்தில் போட்டு 5 நாள் சூரிய புடம் வைத்து சுண்டின பிறகு எடுத்து கல்வத்தில் அரைத்து வைத்துக் கொள்ளவும். அனுபானம் ஒரு வேளைக்கு மிளகு பிரமாணம் 3 நாள் இரு வேளை கொடுக்கவும்.

பத்தியம் புளி நீக்கவும்.

வாய்வு சூரணம்.

ஓமம் படி.$\frac{1}{4}$, மலைதாங்கி வேர் பலம்.1, பெருங்காயம் 6 பைசா, சுக்கு பலம்.1, வீட்டுப்பு 6 பைசா, சோடா உப்பு 6 பைசா, அக்கிப் பட்டை பலம்.1, அறுவாப் பிடி கிளங்கு பலம்.1. இச்சூரணத்துக்கு சமம் அஸ்கா.

நீர்கோவை, மகோதரம், பாண்டு, பெருவயிறுக்கு பேதியில்லா மல்

நீரை வடிகட்ட மருந்து.

படிக்காரம் பலம்.1 வெடியுப்பு பலம்.1 வெங்காரம் பலம்.1 மூன்றையும் தனி பொடித்து ஒரு ஓட்டில் படிகாரம் பரப்பி அதன் மேல் வெடியுப்பு அதன் மேல் வெங்காரம் போட்டு நீர் சுண்ட எரித்து எடுத்து பொடித்து பக்கிரபடுக்கவும்.

அனுபானம்:- இளநீர், நெரிஞ்சுககசாயம், சோம்பு கசாயம் இவைகளில் வேளை

ஒன்றுக்கு ½, 3/4 விராகன் வீதம் 5 அல்லது 7 நாட்கள் கொடுக்க வீக்கம் வடிந்த பின் மண்டூரம் அயம் கொடுக்கவும்.

காசினி விரை, சோம்பு, வெள்ளரி விரை, இசம் விரை, வகைக்கு மிஸ்கால் 5. காசினி வேர் பட்டை அப்பன் கீன் கிக்மி விரை, அதிமதுரம் மாசா ஜடாமாஸ் கால் ஐயின் அனிசூன் வகைக்கு மிஸ்கால் 3 இவை நசுக்கு 5 ராத்தல் தண்ணீரில் இரவு பகல் ஊற வைத்து விரை கிராகூசி பலம். 2 போட்டு அடுப்பில் வைத்து இரண்டு ராத்தல் கஷாயம் இறக்கி வடித்து இதில் 12 பலம் சீருகல்கண்டு போட்டு சிமாம் செய்து வைத்து 2, 3 தோலா இரண்டு நேரம் 7 நாள் புளிகாரம் நீக்கி சாப்பிட்டால் பல விதமான பழைய சுரம், குதக பந்தம், மசாநு குந்தாலில் கல்லு கரையும். 3 விக வெள் ஊயும் தீரும். நீர் உப்பு, கலந்து வருவதும் சுகப்படும். நீக் சரியா இறங்கும் காமாலே சுகப்படும். ஜீகர் தில்லி சுத்தி யாகும். மந்தம் பசியில்லாமை முதலியது சுகப்படும்.

கடுக்காய், காணிக்காய், கபாலிக் கடுக்காய், பிஞ்சு கடுக்காய், நெல்லிக் காய் வகைக்கு தோலா. 1, இடித்து சலித்து சூரணம் செய்து நெய் பலம். 1, விட்டு பிசறி இதில் விரை நீக்கியது பலம். 5, போட்டு இடித்து வைத்து ½, 1, தோலா 7, 9, 11, நாட்கள் சாப்பிட்டு வர மூலம் ரத்த விழுதல், வயிற்று வலி, கிருகிருப்பு, திமரிகில் பல மாகும். தூஙக் ஞாபக மறதி, காப்ருஉறங்கில் தீரும். வறணம் திரும்பும். உடம்பு வெளி யாவதும், மூலவியாதி, தலைவலி, காதுவலி இவைகளுக்கு தனியா கியாழத்தில் சாப்பிட்டு வரவும்.

செயநீர்.

பழைய புளி 8 பாகம், வெடியுப்பு 10 பாகம், நவச்சாரம் 10 பாகம், சீனம் 10 பாகம், அமுரியுப்பு 1 பாகம், கல்லுப்பு 1 பாகம், பூநீர் 1 பாகம் வளயலுப்பு 1 பாகம் ஏகமாய் கட்டி இடித்து எரிக்க பூமி நாதம் உருகி உப்பாகும். பிறகு பீங்கானில் வைக்க ஜெயநீர் இந்த ஜெயநீரில் தாய். தங்கம் போட்டால் ரத்தம் போலிருக்கும். இதை மறுநாள் இருத்து இதில் கற்பூரம் போட்டு வைக்க எதவும் ஆடலாம்.

ரச செந்தூரம்.

சூதம் ரசத்து ரச சத்து 4 துட்டெடை எடுத்து வந்து இரண்டு கிண்ணி செய்து ஒரு எடை சூதம் விட்டு மேல் கிண்ணம் மூடி தீ எரிக்க உருகி கட்டும். பிறகு கக்காசீ மடல் 4 துட்டெடை எடுத்து தேன் 4 துட்டெடை சேர்த்து அரைத்து ஒரு சிறு குடுவையில் போட்டு மேல் மூடி சீலை மண் செய்து விராகு புடம் வைக்கவும். ஆவாரம் பூ போலே வர்ணம் ஆகும். இதை நாற்றுக்கு ஒன்று குடு கொடுக்க வயது 10½.

அதிவிடையம் பலம். 1, கடுக்காய் பு பலம். 1, லவங்கப் பட்டை பலம். 1, போஸ்சகாய் பலம். 1, மங்குஸ்தான் பலம். 1 ~~இந்நான்கையும்~~ வெயிலில் உளர்த்தி இடித்து தூள் செய்து மோர் பால் இவைகளில் திரிகடுகு காரம் குறைப்பு.

தீரும் நோய்:- அதிசாரம், கழிச்சல், வயிறு, கற்றல், ரத்த பேதி இவை தீரும்.

வான்மெழுகு பாட்டு.

கேளப்பா வாலிபனே இந்த சிமகி உலகினில் வான் மெழுகு வான் மெழுகு வந்திடும் முறை சொல்லுவேன்.

ஆதி வள்ளலென்றும் நந்தியார்க்கு மகிழ்ந்துரைப்பார் மகிழ்ந்துரைப்பார்
அதை வளமுடன் செய்திடும் முறையை சொல்வேன் முறையை சொல்வேன்.

செல்லரளி சரக்கு எடுத்து சாம்பல் செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து பூச தோலை பற்றிய சிலப்பு வட்டம் புண் புற்று ஆறி நீங்கும்.

வெள்ளரளி

வெள்ளரளி சரகு எடுத்து மேல் மாத்திரி செய்து வெண் குஷ்டத்திற்கு பூச குணம் தரும்.

கிளுவம் பாலை எடுத்து மூடு புண்ணுக்கு போட ஆறும்.

வங்கச் சுண்ணம்.

சோற்றுப்பு 1படி, கடல் நுரை 1 படி இவை இரண்டையும் தூள் செய்து குகையில் அல்லது சட்டியில் வைத்து தருக்கிவைத்து பழுத்து உருகி கட்டிப் போகும்.

வங்கத்தை வெட்டை செய்து நன்று சார விட்டு அரைத்து வில்லை தட்டி மேல் கண்ட சுண்ணத்தை வில்லைக்கு கவசம் செய்து 50 அல்லது 60 விரட்டியில் புடம் போட சுண்ணம். இந்த சுண்ண குஷ்ட வியாதிக்கு கொடுக்கலாம். இந்த வங்கத்துடன் ரசமும் கெந்தகமும் சேர்த்து செய்தால் வகாரம் பூர்த்தியாகும்.

இரச செந்தூரம்.

சுத்த நாலு துட்டெடை எடுத்து உந்து இரண்டு கிண்ணி செய்து ஒரு எடை சூதம் விட்டு மேல் கிண்ணம் மூடி தீ எரிக்க உருகி கட்டும். பிறகு கத்தாழை மடல் 4 துட்டு எடை எடுத்து தேன் 4 எடை சேர்த்து அரைத்து ஒரு சித்து குடுவையில் போட்டு மேல் மூடி சீலை மண் செய்து வருக புடம் வைக்கவும். ஆவாரம் பூ போல் வர்ணம் ஆகும். இதை 100-க்கு ஒன்று தாக்க வயது 10½

சூதம், வெள்ளை வகைக்கு கழஞ்சு 5 கூட்டி கோழி மஞ்சள் கருவால் அரைத்து உலர்த்தி செம்பு குடைந்து மூடி சீலை செய்து மணலில்வைத்து இளந் தீயால் 36 நாழிகை வரை எரித்து செம்பு பசரி பளபளப்பாக இருக்கும். இதை எடுத்து 3 தடவை எரித்து சூதம் வலிவும் இதை எடுத்து குளிகை செய்து ஆமணக்கன் வேரும் பட்டையும் முருங்கை பட்டையும் இடித்து ரசம் பிழிந்து இந்த ரசத்தில் உருக்கிலூல் கட்டும்.

சூதம் மணியாக:- கரியுப்பு, வெடியுப்பு துருசு காரம், சூதம் சமயெடை நேர்பட அரைத்து நீர் விட்டு கழுவினால் சூதம் மணியாகும்.

சூதம் மணியாக:- பிரம்பட்டை ரசம் வில்வ ரசம் இதுகளில் மணியாகும்.

சூதம் வெள்ளி முறை.

1 ரூபாயெடை சூதம் 1-வது பாகயிலை 2-வது திருநீற்று பச்சை இலைகளில் ஒரு சாமம் அரைப்பு 3-வது வெற்றிலை சாறு அரைத்து சூதம் காய வைத்து வெண்ணை திரளும். குழாயிலே போட்டு ¼ ரூபாயெடை வெள்ளிபொடி வார்த்து குழாயை மூடி சீலை செய்து 40 எருவில் புடம் போட வெள்ளியாகும். 3/4 ரூபாயெடை வெள்ளியாகும். பிறகு வெங்காரம் கொடுத்து உருக்க 3/4 ரூபாய் ஆகும். விடத்தாரையும் சேர்க்கலாம்.

சூதம் குளிகை:- கவுதும்பை, திருமேனி, அமுக்கு கார்த்திகை முகட்டை விரை

அரைத்து குகை செய்து மேல் அகால் மூடி பிறகு 5 சீலை மண் செய்து புடமிட குளிகையாகும். நீர் வாங்கும்.

லிங்கம், வெள்ளை பாஷாணம் சமம். வாழை கட்டையால் வைத்து கெசப்புடம் போட்டால் கட்டிப் போகும். பிறகு வாத்து காரம். நன்கு ஒரு 1 பலம் அரைத்து குகை செய்து ரசம் 1 பலம் வைத்து நன்கு கொடுப்பை அதின் மேல் வைக்க தேள்ச் சுரி வேரை அரைத்து கவசம் செய்து மண்சீலை செய்து புடமிட வள்ளம். தாம்பிரத்தில் கொடுத்திரல் வெள்ளையாகும்.

பழச்சாறு என்றதற்கு விபரம்.

சிவந்த சரகு, பூநீரும் நாகமும் சூடமும் சேர்ந்த சுத்த ஜலம் விட்டரைத்து தெளிவிருந்து புட்டியில் வைக்கவும். இதனால் பழச் சாறு,

கண்டங் கத்திரி சாறு விட்டு சூதம் விட்டு கருவத்திலரைத்து 12 சாமம் அரைக்க மெழுகு ஆகும். அந்த மெழுகை செம்புடப்பியில் அடைத்து சீலை செய்து சுண்ணாம்பு 3 படி கொட்டி டப்பி வைத்து மேலே 3 படி சுண்ணாம்பு போட்டு பனங் கள்ளு ஊற்றி தாளித்தால் மெழுகு ஆகும். 100-க்கு 1 தாய் சேர்த்துக் கொள்ளவும்.

முறை சுரத்துக்கு.

குன்னி பட்டை கொஞ்சம் லவங்கம். 4, வெற்றிலை. 2, ஒருதலை பூண்டு. 2 வைத்து நசுக்கி துணியில் முடிந்து சுரம் வரும் போது மூக்கில் முகரவும். நின்று விடும்.

கெந்தி மெழுகு.

சுத்தி செய்த கெந்தி பலம். 4, ஒரு பீங்கான் தட்டில் போட்டு குதிரை மூத்திரம் படி. 1, அல்லது ஒரு சட்டியில் ஊற்றி காய்ச்சி

மண்சீலை கவசத்துக்கு முறை.

குயவன் மண் பாகம் ஒன்று பலம். 1, கொல்லம் ஒடு நாள் வஸ்திர காயம் பாகம். 2, செம்மண் பாகம். 1, சாக்கு நாள்நயமாய் வெட்டின நாள் பாகம் பலம். ½, இவைகளை நேக அரைத்து சீலைக்கு தடவி செய்ய கவசம் பெறும்.

பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் வயிறு இறைந்து கழிச்சலுக்கும் பொருமல் கழிச்சலுக்கு.

சுக்கு 5 பலம் நல்ல திரண்டதாய் வாங்கி மேல் புரணி சீவி கல்லுப்பு அரைத்து சுக்கின் மேலே தடவி காய்ந்த பிறகு ஒரு ஓட்டில் நெல்லும் கொஞ்சம் போட்டு அதன் மேலே கரி 2 படி போட்டு நெருப்பிட்டு ஊது குழலாலே ஊதி தணல் உண்டாக்கி சுக்கை அதின் பேரில் வைத்து இடுக்கியாலே பிறட்டி கொடுக்க மறுபடி எடுத்து முன் போலே உப்பு தடவி தீயாமல் பிரட்டி கொடுத்து சுக்கு பிளந்து விரியும். இப்படி 3 தரம் செய்து எடுத்த உப்பை தேய்த்து போட்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டு நேக அரைத்து சீட்டி

பெரும்பாட்டுக்கு.

சுண்ணாம்பு தெளிவு நீர் இருத்து அதில் எலுமிச்சம் ரசம் சேர்த்து அத்துடன் கல் நாரும் படிக்காரமும் சேர்ந்த பற்பமும் கலந்து குடிக்கி சாப்பிடவும். இப்படி ஒரு வாரம் காரம் நீக்கல்.

லிங்க பற்பம்.

லிங்க பற்பம்.

சிவன் வேம்பு வேர் பட்டை அரைத்து கூட்டி சாந்து அரைத்து குகை செய்து அக்குகைக்குள் லிங்க கட்டியை வைத்து சந்து வாய் சீலை 5 செய்து முக்குடம் புடம் எடுக்க எடை போகாது.

அநுபானம்:- தேன்

தீரும் வியாதி:- மேகம், வாய்வு, வாதம் 80, சூலை 18, சன்னி 18, பாரிச வாய்வு, இருமல் ஈளை இளைப்பு, சுரம் 64, கபங்களும் தீரும். இன்னும் அநுபானம் தெரிந்து விருத்தி செய்து கொள்ளலாம்.

வீர பற்பம்.

அப்பைக் கிளிஞ்சை குகை செய்து அல்லது துளைத்து அதற்குள் வீரக் கட்டியை வைத்து மேலே சில்லு போட்டு மூடி சீலை செய்து குக்குடம் போட நீறிப் போகும். பிரமாணம் ½ பணவெடை.

அநுபானம்: தேன்

தீரும் வியாதி: சூலை 18-ம், காரம், நீக்கல், புளி நீக்கல்.

படிக்காரம் பொரிகாரம் பற்பம்.

பொரிகாரம் கட்டி வாங்கி சங்கு நீரை அரைத்து குகை செய்து அதனுள் கட்டியை வைத்து மூடி சீலை மண் 5 செய்து குக்குடம் போட நீறிப் போகும்.

அநுபானம்:- தேன்

தீரும் நோய்:- நீர்கடுப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, புற்றநீர், நீரளிவு, முதலியது தீரும்.

சகஸ்திர பேதி பற்பம்.

முலைப்பால் விட்டு அத்துடன் எருக்கம் பால் விட்டு 4 சாமம் அரைத்து உருண்டை செய்து ஓட்டில் வைத்து சீலை மண் 5 செய்து குக்குடம் போட்டு எடுக்க நீறிப் போகும்.

அநுபானம்:- இஞ்சி சாற்றில் சுரம் தீரும்.

பாலில் மூல்லை, கையான் இலைகளில் சுரம் 64-ம் வெள்ளை ரணம் விரைந்து போகும்.

வெள்ளைக்கு.

சகஸ்திர பேதியை பன்றிப் பாலில் விட்டு அரைத்து உருண்டை செய்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி மண்சீலை செய்து 5 குக்குடம் போட நீரும் சுகை நீருக்கு ஒப்பாகும். அன்னீரை வெந்நீரில் கொள்ளகடுப்பு ரக்தம், கிராணி, புண் வெள்ளையி போட வாய்புண் பல்லுப்புண், சூலைப் புண்ஆணி புண் உரைந்து போகும்.

பவள பற்பம்.

முயல் ரத்தம் விட்டு 4 சாமம் அரைத்து வில்லை செய்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து (4) முக்குடம் போடவும் தீரும்.

அநுபானம்:- ஏலமாதா களை நீர் தேன் சேர்த்த அதில் பணவெடை கொடுக்க க்ஷயம், கபம், காச்சல் இருமல் காச்சல், உட்சிரத்துடன் க்ஷய இருமல் தீரும்.

பாசாண பற்பம்.

அண்டக் கோட்டை அன்னமாய் வடி எடுத்து குகை செய்து கட்டி வைத்து அதனுள் வெள்ளெருக்கம் பாலை விட்டு மெதுவாக மூடி சீலை மண் செய்து முக்குடம் போட

நீரும் பற்பத்தின் எடைக்கு ருதம் சேர்த்து முலைப்பால் விட்டு 4 சாமம் அரைத்து வில்லை செய்து காய வைத்து ஓட்டில் வைத்து சில்லிட்டு சீலை செய்து கற்பகக் களிரை பொதிந்து முக்குடம் போட குரு வாகும். வெள்ளீயத்தில் 1½ரூபாயெடை ஈயத்திற்கு பணஎடை ஒரு உருகும் போது கொடுக்க நீர் வாங்கும். சுத்த வெள்ளி, பாலில் கொடுக்க சுரம் 64-ம் தீரும்.

சார நீர்.

புளி 5 பலம் எடுத்து அதை கரைத்து ~~[illegible]~~ அல்லது சுண்ணம் செய்து ~~[illegible]~~ அல்லது உப்பாய் காய்ச்சி அதில் ஒப்பை மேனி சார் விட்டு அதை ஒகை பிடித்து அதில் வைத்து மூடியும் அதனால் செய்து மூடி சீலை மண் செய்து முக்குடம் போட நீரும்.

அநுபானம்:- தேன். மகோதரம், வாயு உதிரம் நீராம்பல் வீக்கம் நீக்கும் ~~[illegible]~~ கெர்ப்ப ரோகம், வன்மம் எல்லாம் போகும்.

வெள்ளை ஓரிஜனலை 10 கிராகன் சுத்தி செய்த செம்புக்கு 1 கிராகன் வெள்ளை கொடுக்க பழுப்பு மஞ்சளாகும்.

திருகு கள்ளி கட்டையை பூமிக்கு மேல் ஒரு முழம் விட்டு அமுக்கு மத்திய பாகத்தி லிருக்கிற சோற்றை எடுத்து அந்த குழிக்குள் வெடியுப்பை போட்டு கரண்டி கர்ம்பை கொண்டு கெட்டிச்சு மேலே சிரணத்தை கொண்டு மூடி 15 நாள் சென்ற பின்பு விராட்டி அடுக்கி புடம் போட கட்டும்.

கிருச்சன் சூரணம்.

ஆவரம்பூ, ஆவரம் விதை, நெல்லி வத்தல், வெள்ள குங்கலியம், கருப்பு காசுக் கட்டி, வேப்பன் பிசின் வகைக்கு பலம். 8, ஆகிய இவைகளை இடித்து சூரணம் செய்து 20 நாள் எருமை மோரில் குழப்பி சாப்பிடவும். கொஞ்ச நேரம் பொருத்து நாகப் பழம், உணர்த்தியது கோலா. 1, சுடு தண்ணீரிலிட்டு காப்பி செய்து சாப்பிடவும். ~~அல்லது டபாயிடிக் தேயிலை 1 பில்லை சுடு தண்ணீரிலிட்டு காப்பி செய்து சாப்பிடவும்.~~ அது அகப்படாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் எவ்வித தித்திப்பும் கூடாது. ஆனால் பழைய கேழ்வரகு, அரிசி, அல்லி விரை, கோதுமை, நெய் இதனால் ரொட்டி களி சாதம் சாப்பிடவும்.

அரிசி சோறு சாதம் கூடாது. ஆனால் வெள்ளாட்டு கறி, பசும்பால், நெய்குப்பு சாப்பிடவும். ~~ஆனால் மருந்து கொடுக்கும் முன் காய்ச்சல் பட்டணம்.~~

இதனால் பலவித நீர் போக்கு, பலவித தித்திப்பு நீர் ஒழுகல், பலவித நீர் எரிச்சல், பலவித நீர் கட்டு, சொட்டு மூத்திரம், நீர் சுருக்கு, கல்லடைப்பு முதலியதும் உடனே சுகமாகும். வெகு நல்ல முறை.

*****

முற்றும்.

சு.ச. 30.11.62.

[illegible]

Verified 13/2/63

- 2 -

27.11.62. **வெள்ளி முறை.**

வெள்ளியம் பலம்.10, ரசம் 1 காசுயெடை இது இரண்டையும் உருக்கி கல் சுண்ணாம்பு குகை செய்து அதில் மரு தோன்றி பிலேயை அரைத்து குகையில் வைத்து அதன் மத்தியில் வெள்ளியத்தை வைத்து மேலும் சாந்து வைத்து அதன் மேல் குகை மூடி சீலை மண் செய்து ஒரு கரும்புட மிட்டு அசியம் வெள்ளியாம்.

சுத்தநாக வலுவு.

வெள்ளி 1 பணவெடை, சுத்த நாகம் 6 காசெடை, ரசம் 6 காசெடை இது இரண்டும் இரும்பு கரண்டியில் போட்டு உருக்கி உருக்கின முகத்தில் மேல் கண்ட வெள்ளியை போட உருகும். இம்மூன்றும் உருக்கின நாகக் கட்டி குகைக்குள்ளிட்டு 1 கிருஉஷ்ண ஊசியுடன் பொற்றலையும் சமன் எடுத்து அரைத்து நாகக் கட்டிக்கு கீழு மேலும் வைத்து சில்லிட்டு சீலை மண் செய்து குக்குடம் மூன்று இட களங்காகும்.

இந்த களங்கம் 1 களஞ்சு வெள்ளிக்கு ஒரு நெல்லிடை களங்கம் கொடுக்க மாற்று 7 காணும். இந்தகளங்கை செம்பில் கொடுக்க மாற்று 7 காணும்.

சுத்த நாகம் வலிவுக்கு தேவதை வயிரவன்

சுத்தநாகம் 1 பலம் எடுத்து இலுப்பை நெய்யில் நனைத்து கரண்டியில் உருக்கி மணக் கள்ளிப் பாலில் 10 தடவை சாய்க்கவும்.

இலுப்பப் பட்டை, மாம்பட்டை சமன் எடுத்து இடித்து தண்ணீர் விட்டு பிசைந்து வடித்து அதில் 10 தடவை சாய்க்கவும்.

குப்பை மேனியும் கண்டங் கத்திரி இரண்டும் சமம் எடுத்து இடித்து வடித்து இதில் 10 தடவை சாய்க்கவும்.

சிறு செருப்படை சாற்றில் 10 தடவை சாய்க்கவும்.

சுண்ணம்பு நீற்றிய தண்ணீரில் 10 தடவை சாய்க்கவும்.

இதில் முடிந்த பின்பு கல்லுப்பும் நாயுருவி இலையும் சமன் கொண்டு அரைத்து நாகத்திற்கு கவசம் செய்து உப்புக்குள் வைத்து மூடி சீலை மண் செய்து குக்குட மிட நாகம் வலிவு உண்டாகும். இந்த நாகம் 2 விராகன், சுத்தி செய்த நாகம் 10 விராகன், இந்தஇரண்டு உருக்க 8 மாற்று ஆகும்.

சுத்தநாகம் வலிவு. 3.

சுத்தநாகம் 5 காசுயெடை எடுத்து இலுப்பை நெய்யில் நனைத்து கரண்டியிலிட்டு உருக்கி மணக் கள்ளி பாலிலாவது மணக் கள்ளி சாறிலாவது 10 தடவை சாய்க்க களிம்பு அறும். பிறகு மஞ்சேசிலையும் நவச்சாரமும் அரைத்து பசி அதன் மேல் அமுக்சி விரை பருப்பு எடுத்து அரைத்து பூசி அதன் மேல் கல்லுப்பு, அரைத்து பசி ஒரு ஓட்டில் வைத்து மேலே ஒரு ஓடு மூடி சீலை மண் செய்து குக்குடம் இப்படி 3 புடம் வலிவு.

சுத்தி செய்த நாக செம்பு 10, நாக வலிவு .2, உருக்க உருக்கு முகத்தில் சீனக்கரம் கொடுக்க பழுக்கும்.

நத்தை ஜெயநீர்.

உயிருடன் இருக்கும் நத்தைக் கூடு படி.1, சோற்றுப்பு படி.1.

செய்முறை:-

ஒரு கலயத்தில் $\frac{1}{2}$ படி உப்பு கொட்டி அதன் மேல் நத்தை கூடுகளை கொட்டி அதன் மேல் உப்பு கொட்டி அழுகுறி சீலை செய்து பூமியில் 3 மாதம் புதைத்து அனுதினம் தண்ணீர் தெளித்து வரவும். மூன்று மாதம் சென்று எடுத்து ஜெயநீர் இந்த ஜெயநீரில் வீரம் சேர்த்து பதனம் செய்யவும்.

ரசம் ஒரு பலம், ஜெயநீர் பலம். $\frac{1}{4}$, சாம்பிராணி வெள்ளை வெத்திலை ரசம் பலம். $\frac{1}{4}$, இவைகளை சேர்த்து அரைக்க ரசம் வெள்ளை ஆகி உருட்டினால் உருளும்.

கருப்புடையார் முறை.

பூநீர் ஜலத்தில் சோற்றுப்பை ஜலத்தின் மதிப்பு கண்டு சோற்றுப்பை ஒரு பிளேட்டில் போட்டு மேற்கண்ட ஜலத்தைவிட்டு சூரிய ஒளியிலும் இரவிலும் 28 நாள் போட்டு ஜலம் வற்ற வற்ற விட்டு வர வேகாமல் மூப்பு ஆகிறது. [illegible]

பட்டுக் கருப்பு.

லிங்கம் பலம். $1\frac{1}{4}$, கெந்தி பலம். $1\frac{1}{4}$, கௌரி பலம். $1\frac{1}{4}$ இவைகளை சுத்தி செய்தது அரவை மேனி ரசம் 2 சாமம் அரைத்தால் அருணன் போல் நிறம் வரும். உலர்ந்த பின் சிற்றாமணக்கு எண்ணெய் விட்டு அரைத்து மெழுகு பதமாக்கி உருட்டி வெண் பட்டு துணியில் சுத்தி சித்திர மூலம் அரைத்து கவசம் செய்து 7 சீலை மண் செய்து உலர்த்தி சீலை மண் பழுக்க புடமிட வாசனை வரும். அப்போது எடுத்து ஆற விட்டு தேன் இஞ்சி சார் மிளகு கஷாயம்.

ஜன்னி கதல முறை.

வீரம், பூரம், கெந்தகம், லிங்கம், தாளகம், மனோசிலை, பால்துத்தம், குருசு வெள்ளை பாசாணம், பொரித்த வெங்காரம், சும்பி நவச்சாரம் படிகாரம் வகைக்கு விருகன். 1.

செய்முறை:- இவைகளை கல்வத்தில் போட்டு நன்றாய் அரைத்து 5 பலம் உரித்த வெள் ளுள்ளியை கொஞ்சம் கொஞ்சமாக போட்டு மெழுகு வண்ணமாய் அரைத்து சுத்தமான வெள்ளை துணியில் தடவி 2.3, ஓணானைக் கொண்டு அதன் தலை தோல் குடல் கால் வால் முதலியவற்றை போக்கி அவைகளை ஒன்று சேர்த்து தந்தி கம்பியால் இரண்டொரு இடங்களில் கட்டி அதன் பேரில் துணியைச் சுற்றி 15 பலம் வேப்பெண்ணெய் விட்டு சுடர் தைலமிறக்கி வாங்கிய தைலத்தை மீண்டும் அதன் பேரில் விட்டு இப்படி மடக்கி மடக்கி 3 முறை செய்து துணியில் வடித்து அதனில் 2 விராகனிடை சுத்தி செய்த வாளத்தை தைலம் விட்டு நன்றாய் அரைத்து மிகுதியுள்ள எண்ணெயில் போட்டு கலக்கி கொண்டு பிரயோகம் தினம் ஒரு நேரம். காலையில் வயதுக்கு தக்கபடி 3 முதல் ஆறு துளி வரையில் முலைப் பாலில் சேர்த்து குலுக்கி கொடுக்கவும். 1 வருடம் 2 மாதம் குழந்தைகளுக்கு 1 முதல் 3 துளி வரை நாவில் தடவவும். பெரியவர்களுக்கு 12 துளிக்கு மேல் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

தீரும் வியாதிகள்: பச்சை வாதம், தனுர்வாதம், சச்சி வாதம், லக்வர், காக்கை வலி, முயல் வலி, உமர கண்ட வலி, குதிரை வலி முதலியன.

பட்டு கருப்பு அரைத்து கொடுக்க கீழ்கண்ட வியாதி தீரும். சன்னி, ஜுரம், சுகசன்னி, வயிற்று வலி, வாய்வுகள், சத்தி போகும். வயிற்றில் வாதிக்கும், கிரஹ பேதி மாந்தமும் செரியா மலம் முதலியவை அளவு 1 முதல் 2 அரிசி அளவு வரை. அனுபானம் தேன் கழுதைப் பால். புளி காரம் நீக்கல். மிளகு, சிறுகீரை

கஉஷாயம் போட்டு ஓமம் ஸ்நானம் செய்து புளி சேர்க்கவும்.

தேங்காய் மெழுகு.

பாங்காகவே அரநார் பார்வதிக்குத் தானுரைத்த தேங்காயின் லேகியத்தை செப்பக் கேள்.

தீங்கில்லா சாதிலிங்கம், பூரம் கனிக்கனி விராகனிடை இரண்டு வாதிக்கும் காந்தம் விராகன் ஐந்து சாதி பொரிகாரம், மிக்க பெருங்காயம் சீனம், வழு லான இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு கல்லுப்பு. கரியுப்பு வேண்டும் சவுக்காரம் வெடிதான திப்பிலி மாரீசம் சேர்ந்த சுக்கு தன்னுடனே தப்பாமலே வகைக்கு தான் கேளு மூன்று விராகனிடை

முயல் சூழலே வெள்ளுள்ளி தோன்றம் பசும் இரண்டு தோல் போக்கி உத்தா [illegible] மணி சாற்றில் ஒரு ஜாமம் தானரைத்து முற்றிய தேங்காயிக்குள் முகில் அடைத்து வஸ்திரத்தால் தேங்காயின் கண் அடைத்து சேர்ந்தாலின் சானி பதித்தாங்கா புட்டு ஆறிய பின் பாங்காக கொட்டாங் குச்சி தள்ளி கூட்டி எடுத்து இடித்து வட்ட பிட்ட சட்டியிலே வைத்ததின் பின் கொட்ட முத்து என்னைத னை விட்டு இயல்பாய் கரண்டி இரண்டு இருப்ப கப்பை கொண்டு கிண்டி வெண்ணை போல் லேகியம் தான் வெந்த பின் மண்ணில் இறக்கும் பொழுது, நாலருக்கு பூஜை செய்து வஜ்ரப் பால் கரண்டி இரண்டு விட்டு கிண்டிக் கிளரி கெதி பெறவே பாக்களவு உண்டு வர லேகியத்தை கூறக் கேள்.

கெண்டையுடன் வாய்வு பிரச்சி மகோதரம், நீராம்பல் ஏயா வயிற்று வலி உள் கலிசை வெட்பாலை மீது சலக் கோவை மெய்விக்கம் அத்து போம். குதக வாய்வு முதல் நேர்த்தம் மந்த ரோக மெல்லாம் நாசமாம். வியாதி யெல்லாம் நாடாது.

முறையுடனே புளி பகை தள்ளி அரை மண்டலம் கொண்டாக்கால் கனி பெரு போம் விருங்கான் வியாதி என்று.

பாங்காகவே அர நாள் அந்தை மகிழ்ந்தே யுரைக்கார் பாருலகில் மானிடருக்கு பரிந்து.

வேலம் பாலயம் முறை.

செம்மேகம் வட்டத்திற்கு.

பாப்பார் முள்ளி, ஈர வெங்காயம் சமன் எடை. முதலில் பாப்பார் முள்ளியை இடித்து அதில் வெங்காயத்தை போட்டு இடித்து ரசம் பிழிந்து அந்த எடைக்கு நல்லெண்ணை சேர்ந்து 7 நாளைக்கு 7 வேளை கொடுக்கவும். உப்பு, புளி புகை நீக்கவும்.

தீரும் வியாதி: செம்மேகம் வட்டம் மஞ்ச வெள்ளை கந்தி வெள்ளை தீரும்.

~~[illegible]~~. குஷ்ட வகை தீர அக்கினி குமாரி செந்தூரம்

அயப்பொடி, தாம்பிரப் பொடி, வெங்கலப் பொடி, பித்தளைப் பொடி, காந்தம், மனோசிலை, வெண்காரம், அரிதாரம், அரிசித் திப்பிலி இவைகள் வகைக்கு பலம். 1, இவைகளை குமரிச் சாறு விட்டு 24 சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி சட்டியில் வைத்து கவசம் செய்து 7 சீலை மண் செய்து உலர்த்தி 24 சாமம் எரிக்க செந்தூரம்.

மாவிலிங்கம் சாற்றில் $\frac{1}{2}$ பணவெடை கொடுக்க வாதம் 80, சீலே 18, குஷ்டம் 18, வாய் வேக்காடு வண்டு கடி செல்லண்டு கடி கடி விஷங்கள் கபால குஷ்டம் சிரங்கு படர் தாமரை வெள் குஷ்டம் செங்குஷ்டம் கருங்குஷ்டம், புள்ளிகள் இவைகள் தாமரைப் பஞ்சப் பொதியில் நெருப்பு பட்டது போல் ஆகும்.

கும்மட்டிக்காய் சாற்றில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் சாப்பிட 44 நாளில் உதிரத்தில் ஊன்ற ரோகங்கள் வாய்வு ரோகம் விப்புருதி அகுளை வீக்கம் மேல் மகோதரம், கெற்பசூலே, பீலிகை 18 வெட்டும் பெருவயிறு மேல் வயிறு வீக்கம் அடி வயிறு வீக்கம் நீராமை பாண்டு கெண்டை தீரும்.

சுத்தி செய்த நாபி பலம்.1, மேற்கண்ட செந்தூரம் பலம்.1, அரிசி திப்பிலி பலம்.2, இவைகளை வெள்ளை பூண்டு தைலம் விட்டு அரைத்து பணவெடை குளிகை செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதை வெள்ளுள்ளி சாற்றில் கொடுக்க சன்னி 13-ம் தீரும். வியாதிக்கு தகுந்த பத்தியம். புளி நீக்கல்.

ஜூதி பூபதி மெழுகு குஷ்டம் 18-க்கு.

சுத்தி செய்த ரசம் பலம்.1, சுத்தி செய்த கெந்தி பலம்.1, சுத்தி செய்த பூரம் பலம்.1, வீரம் பலம்.1, லிங்கம்.1, மநோசிலை பலம்.1, அரைப்பு வேப்பிலை கசாயம் 15 நாள் அரைக்க மெழுகு. கிழிர் போகும். நரம்பு பற்றிய வியாதி தீரும்.

ஆலம் பழம் குளித் தைலம்.

ஆலம் பழத்தை நிழலில் உலர்த்தி குழித் தைல மிறக்கி லிங்கத்துக்கு தங்க ரேக்கை சுற்றி அபிரேக்கு தகட்டில் சுருக்கு கொடுத்து மெழுகு ஆக்கி அதன் பின் கெந்தகத்தை சேர்த்து மேற்கண்டதை விட்டு அரைக்க மெழுகு. இது குஷ்டத்திற்கு ஆகும். கெந்தகத்தை தனிமையாக அரைத்து கொடுக்கலாம்.

செப்பி ஜெயநீரில் கெந்தகத்தை குவைத்து வெயிலில் வைக்க பூத்த சுண்ணம் அல்லது சிப்பி சுண்ணத்தில் கெந்தகத்தை வைத்து நிதானமாய் எரிக்க சுண்ணம்.

காளகு பற்பத்துக்கு அநுபானம் கருவேலம் பட்டை கசாயம்.

கெந்தகத்தை வெள்ளை நீர் முள்ளியில் 6 கட்டலை பாவனை செய்து உலர்த்தி கொடுக்க வெள் புள்ளி தீரும்.

கெச்சான் தரையிலும் கெந்தகத்தை அரைத்து பற்பம் செய்து கொடுக்க வெள்ளை புள்ளி தீரும்.

குலே தைலம்.

பூவரசன் பட்டை ரசம், மாவிலிங்கம் பட்டை ரசம், முருங்கை பட்டை ரசம் ரசம் படி $\frac{1}{4}$, வேப்பெண்ணை படி, $\frac{1}{4}$, கருஞ்சீரகம் பலம்.2, யூகலெப்டிஸ் 2 அவுன்ஸ்.

கோழி முட்டை தைலம் 1/8 படி பதமாய் காய்ச்சி வடித்து சீழ்களுக்கு பூச நிவர்த்தி.

மேகசஞ்சிவி லேகியம்.

இளம் நன்னாரி வேர் $\frac{1}{2}$ வீசை, தும்பு ராஸ்டம் 1 பலம், பரங்கி சக்கை 1 பலம், சன்ன ராஸ்டம் 1 பலம், பசு நெய் 5 பலம், சர்க்கரை அச்கா 5 பலம் செய்முறை: இவைகளை சூரணம் செய்து அதில் பசு நெய்யும் சர்க்கரையும் சேர்த்து இடித்து எடுத்து பிசரி உருண்டை செய்து வைத்துக் கொண்டு தினம் அளவு கழிசசிக் கொட்டை பிரமாணம் காலை மாலை 40 நாள் சாப்பிட தீரும்.

தீரும் வியாதி: மேகம் 21-ம் அசுத்த ரத்தத்தை சுத்தி செய்தல் எல்லா வியாதிக்கும் கொடுககலாம. பத்தியம் கிடையாது.

இந்த லேகியம் நெருப்பில் கொடாமல் செய்ய வேண்டும். வாயுவு பதார்த்தம் நீக்கல்

சுகாதார களஞ்சியம் முறை.

அறுவகை ஜெயநீர்;— வெடியுப்பு பலம்.5, கருக பலம்.5, சோற்றுப்பு அல்லது பூநீர் பலம்.5, வெங்காரம் பலம்.5, படிக்காரம் பலம்.5, நவச்சாரம் பலம்.5, இந்த ஆறு சரக்கையும் கல்வத்திலிட்டு சன்னமாக இடித்து ஒரு பீங்கானில் கலந்து பனியில் வைக்க வேண்டியது. இப்படி 20 நாள் பனியில் வைத்து 20 நாள் காலையில் பார்த்தால் நீரிறங்கி இருக்கும். அதை சீசாவில் பதனஞ் செய்து வைத்துக் கொள்ளவும். ~~இதில் அநேக மருந்துகளிருக்கும். அதை சொல்ல விரிவாகும்.~~ லிங்கம், சிலை, தாளகம், கௌரி வெள்ளை இவைகள் கட்டும். சரக்கு கட்டும் போது மெழுகு போதுமானது.

அயக் களங்கு.

அயப் பொடி பலம்.1, சவுக்காரம் விராகன்.½, வெங்காரம் விராகன். 2½, நாட்டுச் சாரம் விராகன்.1¼, கருக விராகன் 2½, வீரம் விராகன .1, தாளகம் விராகன்.1¼, இவைகளில் சவுக்காரம் முதல் தாளகம் வரையில் கல்வத்திலிட்டு வெடியுப்பு ஜெயநீரால் 1 சாமம் அரைத்து பின் சார நீரால் 1 சாமம் அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து 3 பங்கு செய்து 1 பங்கில் மேற்கண்ட அயப் பொடியை கலந்து மூசையிலிட்டு ஊதவுமி பொடித்து மறு பங்கில் பிசறி மூசையிலிட்டு ஊதவும். இப்படி மறு பங்கிலும் சேர்த்து உருக்கி எடுக்க திரை சவுடு நீங்கி களங்கு நிரம். உப்புக்கும் காரிக்கும் அசையாது.

நாகக் கட்டு.

சி.நாகம் பலம்.2, பூநீர் பலம்.1, நாட்டு சாரம் பலம்.1, இவை இரண்டையும் அரைக்க மெழுகு. இதை மேற்கண்ட நாக பில்லைக்கு கவசம் செய்து உடனே சிற்றண்ட ஓடு பலம்.1, வெங்காரம் பலம்.1, இவை இரண்டையும் சதுரக் கள்ளிப் பால் விட்டு அரைத்து கவசம் செய்து மேல் சுண்ணாம்பு சீலை செய்து 15 எருவில் புடம் பின் பூநீர் பலம்.1, சாரம் பலம்.1, தாளகம் பலம்.1, இவைகளை அரைக்க மெழுகு. இதை மேற்கண்ட நாகத்திற்கு கவசம் செய்து சன்ன சீலை செய்து 15 எருவில் புடமிட ஐந்து விதி புகையும் சீறலுமில்லாமல் கட்டும்.

மந்தார காசத்திற்கு

மேனிச் சூரணம், சோற்றுப்பு சமன் எடை வஸ்திர காயம் செய்து காலை மாலை ½அவு எடை இரவு மட்டும் ~~பாலில்~~ சாக்லேட் பால் ½ படி சாப்பிடவும். நீக்கல் பதார்த்தம் மாமிசம் அனைத்தும். சீதள பதார்த்தம். விடாமல் 48 நாள் சாப்பிடவும். மருந்து நிறுத்திய பின்னும் 3 மாதம் வரை மாமிசம் வாயுவு பதார்த்தம் கடலை எண்ணெய் அவசியம் நீக்கல்.

காரிய கட்டு வேதை.

ஆடாதோடை இலையை நிழலில் உலர்த்தி வஸ்திர காயம் செய்த தூள வீசை 1¼ சிவன் கோவிலில் இருக்கும் கடலாத்தி பட்டையை உலர்த்தி வஸ்திர காயம் செய்தது வீசை.1¼, இவை இரண்டையும் சுத்தமான கொம்பு தேன் விட்டு அரைத்து மெழுகு செய்து 40 பாகமாக வைத்துக் கொண்டு அதன் பின் இரண்டு செங்கல்லை சதுரமாக துளைத்து அதில் சூத்தி செய்து கருவங்கம் வில்லையாக வார்த்து மேல்கண்ட மெழுகை

வங்கத்திற்கு காசம் செய்து செங்கலுக்குள் வைத்து மேல் செங்கலால் மூடி பொருத்து வாயுக்கு 7 சீலை மண் செய்து மிசின் துருத்தியில் வைத்து செங்கல் பழுக்க ஊதி ஆற விட்டு எடுத்து இப்படி 40 புடமிட கருவங்கம் கட்டி மஞ்சள் நிறமாயிருக்கும். இதை சீவி ரவியில் 10-க்கு ஒன்று கொடுக்க வேதை.

கருவங்கம் சுத்தி.

காடி படி.1, விளக்கெண்ணை படி.1, இலுப்பெண்ணை படி.1, இவைகளை கலந்து 10 தடவை சாய்க்கவும்.

தீட்சை செய்த சோற்றுப்பு பலம்.1, சீனம் பலம்.1, சாரம் பலம்.1, உமிழ் நீரால் அரைத்து வில்லை தட்டி 30 விராட்டியில் புடம். இப்படி 3 புடம் சுண்ணம். இச் சுண்ணம் வீரத்திற்கு லேபனம்.

ரணக் களிம்பு.

வெள்ளை குங்கிலியம் பலம்.2, கருப்பு குங்கிலியம் பலம்.2, பச்சை வெட்டு பலம்.2, பால் துத்தம் 1 ~~ரூபாய்~~ ரூபாய் எடை மயில் துத்தம் 2 குண்டு மணி, பூரம் 3/8 ரூபாயெடை, வீரம் ¼ ரூபாயெடை மிருதார் சிங்கு ¼ ரூபாயெடை நல்லெண்ணெய் விட்டு அரைப்பு 4 சாமம். நீறாக புண் தீரும்.

மணிமேவுதற்கு மஞ்சளும் வெள்ளை அணியம் சேர்த்து இடித்து தாள் செய்து கிணத்து பூண்டு நளை ரசம் எடுத்து துணியை நனைத்து சிலர்த்தி தாள் செய்து போடவும்.

வெள்ளிய தொடர்பு.

? அச்சாந்துக்குள் வைத்து சீலை மண் செய்து கோழி புடமிட நீர் வாங்கி கூர் என்று சத்தம் கேட்கும். அதை எடுத்து குகையில் வைத்து அதில் காட்டிய குரு கொடுக்கவும். சுத்த வெள்ளி.

1 பலத்திற்கு 1 குண்டுமணி எடை கொடுக்க ரசிகம்.

இருக்கிற பூவை எடுத்து ஒன்று சேர்த்து குகையில் வைத்து வெங்காரம் போட்டு உருக்க கொரிக்கும். இது கிராவத்திற்கு ஜெயிக்கும்.

கருவங்க வேதை.

கருவங்கம் 1 சேர் வாங்கி மெல்லிய தகளைப் போல் தட்டி காட்டுப் பூவரசு அதாவது ஏரி குளக்கரையில் இருக்கிறபூவரசுக்கு இலையை தையல் இலை போல் தைத்து முதல் இரண்டு இலை பரப்பி அதன் மேல் மேல் கண்ட தகடை கத்தரிக்கோலால் சிறு சிறு துண்டுக்களாக கத்தரித்து இலை மேல் பரப்பி அதன் மேல் இலை வைத்து மேல் கண்ட தாளை பரப்பி அதே போல் ஒரு சேர் தாளையும் பரப்பி இப்படி இலை வைத்து தைத்து ஒரு சித்தான் ரெட்டில் வைத்து தைத்து உருட்டி அதன் மேல் சீலை மண் செய்து கெஜக் குழி தோண்டி அதில் 1½ முழம் காட்டு விராட்டி பரப்பி அதன் மேல் சீல் வைத்து மேலே விராட்டியால் மூடி புடமிட்டு ஆறி ஒரு நாள் சென்று மெதுவாய் எடுத்து மெதுவாய் இலை பிரித்து அதனுள் இருக்கிற பவை எடுத்து ஒன்று சேர்த்து குகையில் வைத்து வெங்காரம் போட்டு உருகக கொரிக்கும். இது கிராவத்திற்கு அதிசி ஜெயிக்கும்.

1. பெண்டி யாதி மூலம் பேசுமார் பெரியோர் ஞாலம்
   கள்ளாடி இந்த நீரைக் கைந்தரியாக வாதி
   விண்டி விட்ட போது வேறொரு ஜெய நீருண்டோ
   மண்டி விட்ட போதே வாயடி முமையாமே.

2. உப்பும் புளியு முடன் கார சாரமும்
தப்பில்லா சூடமும் தனி நீல கண்டரும்
ஒப்ப வரைக்க உடன் குரு வாதமாம்
அப்பிலுள் வேதை அநேக மறிந்திடே.

3. பேரரு மூவர் வேர்ப்பூவும் பேசும் கடல் நீர் பூவும்
சீராகவே சேர்த்து சீக்கிரமாய் நேரார்
பருதி தனில் காய வைத்து பன் பனி நீர் சுட்ட
உருமுப்பூ வாகு மென ஓது. ** நாதவிந்து * நீர்

1. நாத விந்து நீர் - அண்டமும் பூநீரும்
2. அரவகை ஜெயநீர்
3. முப்பு, கடல் நீர் பூ, கடல் நுரை, பாரையுப்பு, கடல் நீர் சங்கு.
கல்லுப்பு எனபது - கடல் நுரை பாரையுப்பு சங்கு.

கடலூர் முறை. வாதம்

அயச்செம்பு 1 விராகன், கட்டிய நாகம் 1 விராகன். சொக்கம் 1 விராகன், கட்டிய லிங்கம் 2 விராகன். இவை நான்கையும் உருக்க உருகி களங்காகும். அதன் பின் ரவி மதியில் 10-க்கு ஒன்று கொடுக்கவும்.

வெள்ளி முறை.

வெள்ளி முறை குரு. படிக்காரம் விராகன். 1, தாளகம் விராகன். 1, வீரம் விராகன். 1, வெள்ளி காடிக் காரம் விராகன். ½, இவைகளை தூள் செய்து மேனி ரசத்தில் அரைத்து உலர்த்தி தூள் செய்து சீசாவில் பதனம் பண்ணவும். அதன் பின் தொட்டாள் சிணுங்கி முள் உள்ள தைஇலை பறித்து சாந்து செய்து வேண்டி வெள்ளீயம் எடுத்து (முடிவல்லை)

தாம்பிர பற்பம்.

வளவாசி, சுவடி முறை.

சிம்மக் காசு, தகடு தட்டி கருங் குன்று மணியை அரைத்து கொள்ளு இலைச் சாறு மருள் கிழங்கு சாறு தேசி நீர் இவைகளை ஒன்று சேர்த்து கலக்கி தகடை காய்ச்சி தலைக்க இப்படி 7 தடவை செய்ய நல்ல சுத்தியாகும்.

அதன் பின் ஆத்தரளி யிலையை அரைத்து அக் கட்டிற்கு கவசம் செய்து ரவி யில் உலர்த்தி சுண்ணம்பு சீலை செய்து கெஜப்புடம் போடவும் தகடு வெண்மையாகும்.

வெள்ளை முள்ளிக் கீரை இலையையும் வெள்ளெருக்கன் தழையும் சமன் எடுத்து அரைத்து கவசம் செய்து ரவியில் உலர்த்தி சுண்ணம்பு சீலை செய்து, கெஜப்புடமிட பற்பம். அந்த பற்பம் 1 பலம் சுத்தி செய்த சூதம் பலம். 1, இவைகளை வெள்ளெருக்கன் பாலும் வென் கருவும் சமன் சேர்த்து அதைக் கொண்டு அரைத்து வில்லை தட்டி சீல் செய்து கெஜப்புட மிடவும் சுண்ணமாகும். இச்சுண்ணம் நவலோகத்திலுமிட மாற்று 10.

நாக செந்தூரம்.

சிறுகன் நாகம் பலம் 10 எடுத்து இலுப்பை என்ணெயில் உருக்கி சாய்க்க சுத்தி. ஆடுகொடா மூலிச் சாறு ஜெயநீர் சேர்த்து 7 தடவை உருக்கி சாய்க்க சுத்தியாகி கட்டிப் போகும். நாக வல்லியிலை நீர் மேல் நெருப்பு இந்த

இந்த மூலிகைகளை அரைத்து கலசம் செய்து சீல் செய்து கெஜபுட மிட பற்பமாகும். அது கெட்டியா யிருந்தால் கற்பூர வெத்திலை சாறும் விடத் தாரை சாறும் சேர்த்து இவைகளை அரைத்து முன் போல் புட மிட பற்பம் பலம்.1, சூதம் பலம்.1, கெந்தி பலம்.1, சேர்த்து குண்டு மல்லி சாறு விட்டு ஆட்டி உலர்த்தி குப்பியில் வைத்து 12 சாமம் எரிக்க செந்தூரமாகும். இதை நவலோகத்திலிட வயது 16.

நவச்சார மெழுகு.

வெடியுப்பு பலம்.1, நவச்சாரம் பலம்.1, இரண்டையும் சிறுநீர் விட்டு ஆட்டி வில்லை செய்து காய வைத்து குகையில் வைத்து சீல் செய்து புடம் போட கட்டும். அதை கல்வத்திலிட்டு கற்பூரம் பலம்.½, நவச்சாரம் பச்சை பலம்.1, ஆவின் வெண்ணை அல்லது நெய் ஒரு இரும்பு கரண்டியில் இதை எல்லாம் போட்டு வெதுப்ப மெழுகு ஆகும். இதை செ.3.வெ.ற. மெழுகு ஒன்று கொடுக்க.

எழுத்தாணிப் பூண்டு சாரில் அயப் பொடியை 3 நாள் ஊரப் போட்டு எடுத்து உருக்க செம்பாகும்.

பூனைக் காலி ரசத்தில் சூதம் விட்டு அரைக்க மெழுகு. மூளையைக் கொண்டு வேலை செய்யவும்.

மெழுகு இறுகி மணியாகும். அந்த மணி வங்க நீர் இழுக்கும்.

நாக மல்லி இலை ரசம் வெள்ளை குண்டு மணி ரசம் சமன் சூதத்தை அரைத்து குளிகை செய்து துளசி கலசம் 5 விராட்டி புடம் மணியாகும்.

பூனைக் காலி.

வடிவம் பூனை கால் மாதிரி. நிறம் சாம்பல். செடி இனம். காயும் பூனை கால் மாதிரி. சேர்வராயன் மலையில் பெருமாள் கோயில் பக்கத்திலிருக்கிறது. திங்கள் சந்தை.

வயிறு உப்பிசம் அஜீரணத்திற்கு.

சுக்கு பலம்.1, மிளகு பலம்.1, திப்பிலி பலம்.1, ஜாதிக்காய் பலம்.1 மாசிக்காய் பலம்.1, கிராம்பு பலம்.1, கசகசா பலம்.1, கான் கொம்பு பலம்.1, சித்தரத்தை பலம்.1, வசம்பு பலம்.1, காயம் பலம்.1, வால்மிளகு பலம்.1, சீரகம் பலம்.1, அதிமதுரம் பலம்.1, இந்துப்பு பலம்.1, ஜாதிபத்திரி பலம்.1, அக்லகாரம் பலம்.1. பட்டை பலம்.1, கோஷ்டம் பலம்.1, குப்பை மேனி பலம்.1, நிலா ஆவரை பலம்.1, இவைகளை இடித்து சூர்ண் செய்து சுத்த ஜலத்தால் அரைத்து கடலை பிரமாணம் உருண்டை செய்து சுடு தண்ணீர் அநுபானத்தில் வேளைக்கு 2 மாத்திரை கொடுக்கவும்.

சு.ச.28.11.62.

***

Verified
15/2/63

- 3 -

not useful

28.11.62. மேகத்து நீர்க்கு. (கண் நோய்க்கு 44)

எலுமிச்சம் பழம் கொண்டு வந்து இறங்கு பொழுதில் 89 பிரை பார்த்து காட்டில் கிடக்கும் கோளங் கட்டை கல் எடுத்து வந்து வைத்துக் கொள்ளவும். கண் ணில் நீர் வடிந்து கண்ணு மூடிக் கொண்டால் கண் எழுச்சல் நீர் இதகளுக்கெல்லாம் எலுமிச்சம் பழத்தை நன்றாக கசக்கி நடுவில் அறுத்து கோழங் கட்டை கல்லே மூன்று ருபாயெடை சாள் செய்து வடி கட்டி மேல் படி நா ளே எலுமிச்சம் பழத்தில் உள்ள விதையை வாங்கிப் போட்டு அதின் உள்ளே இந்த நா ள் போட்டு மேலே அனி மூடி விட்டு படுக்க போகையில் கண்ணில் ஊத்தவும். மூன்று நேரத்தில் ஓடி விடும். இதில் தீராவிட்டால் தலை முழுக்கு எண்ணை நல்ல எண்ணெய் நெய் ஆம விளக்கெண்ணை மூன்றையும் சேர்த்து வடக் கண்ணில் ஊத்தி உருக மஞ்சிசுர சாதிக்காய் ரோஜா மொக்கு இம்மூன்றையும் அவளராயாக அரைத்து வைத்து எண்ணெய் கருக காய்ந்த பிறகு கீழே இறக்கி வைத்து இதை கூடச் சேர்த்து ஒரு புட்டியில் ஊத்தி வைத்து விட்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தலை முழுகி வரவும். 21 நாளில் சுகம் ஆகி விடும்.

வெகுநாள் சென்ற வயிற்று வலிக்கு.

வேலியில் முளைத்து வந்து இருக்கும் கோவக்காய் 150 காய் கொண்டு வந்து நடுவில் இரண்டாக அறிந்து அரைப்படி உப்பும் சேர்த்து 7 நாள் ஊற வைத்து 7 கழிந்த பிற்பாடு அதை எடுதது உரலில் போட்டு இடித்து அதை எடுத்து வைத்து கொள்ளவும். பெண்ணாக இருந்தால் அதை ஊற வைக்க கூடாது. அப்பவே கொண்டு வந்து இடித்து கொடுக்கவும். வெய்யிலில் காய வைத்து வைத்து கொ.ள்ளவும்.

குளிர்க்கு நசியம்.

தமபத் தழை யாருக்கும் தெரியாமல் கொண்டு வந்து வெள் வெங்காயம், குரு மிளகு சேர்த்து கொட்டி துணியில் பொட்டணம் பிடித்து சிறு பெண் பிள்ளை சிறு நீரில் நனைத்து இரண்டு மூக்கில் சார் பிழிந்து விடவும்.

வையர் போக்கு மருந்து.

எலுமிச்சம் பழக் கொட்டை நன்றாக உலர்த்தி வைத்து கொள்ளவும். வயிறு நிக் காமல் போனால் பெரியவர்களுக்கு நெர் பகுதி சிறியவர்களுக்கு கால் பாகம் சுடு நீரி ல் அரைத்து கொடுக்கவும்.

செய்யும் வேலை:- ஞாயிற்று கிழமை கெட்ட நட்சத்திரம் பார்த்து காட்டுச சேனை க்கிழங்குக்கு காப்பு கட்டி எதிரி நமசிவய வென்று பிடுங்கி வந்து வீட்டில் வைக்காமல் சுடலையில் வைத்து விட்டு வந்து பிற்பாடு அவனுடைய மலம் நிற்குளி மண்ணும் பிறந்த நாள் பிறந்த நட்சத்திரம் அவருடைய பெயர் இம்மூன்றையும் பனை ஓலையில் எழுதி சென்னாய் மயிர் கரும்பூனை மயிர் அவனுடைய தலை மயிர் தம்பழம் இந்த ஆறும் சேர்த் த கிழங்கின் நடுவில் அறிந்து உள்ள ஊனை வாங்கிப் போட்டு அதில் இதை யெல்லாம் வைத்து மேலே மூடி 8 கட்டு முள்ளு கொண்டு வந்து நாலு பக்கம் நாலு முள்ளை குத்தி நடுவில்ஒரு முள்ளை குத்தி வைத்து விட்டு நிரிதி மூலையாக உட்கார்ந்து சொல்லும் மந்திரம். என் எதிரிக்கு நான் சொல்லும் மந்திரம் படுபடு சிவ நாலு இட்ட நஞ்சு புத்து போல் வளர்ந்து புதக்கள் போல் சீய்யேரி இட்ட பாய் எடாமல் இருந்து நெருங்கி போகச் சிவா

பவுத்திரம் கண்டமாலை விப்புருதி பிளவை அரையாப்பு இவை களுக்கு மருந்து: மருதோன்றி, நிலி, கருநொச்சி, கார் புதிகை, கிழங்கு, குன்றி

மணி எட்டி, பெருமரத்துப் பட்டை, கஞ்சா, வசம்பு, காயம், வெள்ளுள்ளி, இது
களை அரைத்து பூச தீரும்.

29.11.62. <u>அரையாப்புக்கு பற்று.</u>

பச்சை கொடி வேலி பட்டையையும், சுண்ணும்பையும் ஓர் நிறையாய் அரைத்து பூச வற்றும்.

இதுவும் மேல் படி வியாதிக்கு:- வெள்ளை பாசாணமும் மெழுகையும் அரைத்து வில்லை தட்டி நெருப்பில் வெதுப்பி அரை ஆப்பில் வைத்து கட்டவும் அமுங்கி விடும். வெற்றிலையும் அரைத்து தடவலாம்.

<u>அரையாப்புக்கு அமுங்க:-</u>

பழைய புளி ஒரு பலம் சேங்கொட்டை 10 பலம் இவை இரண்டையும் வைத்து தட்டி வைத்து கட்ட தீரும்.

சுடர் முடக்கொத்தான் இலை சுண்ணும்பு, வெல்லம் இவைகளை அரைத்து தடவ தீரும்.

வெடி கொட்ட முத்து இலையை நெய்ய தடடி வைத்துக் கட்ட தீரும்.

<u>அரையாப்புக்கு அமுங்க:-</u>

எருக்கம் பிஞ்சு, வெள்ளை பூண்டையும் ஓர் நிறையாய் அரைத்து வைத்து அரிதாரத்தை வைத்து அரைத்து கட்டவும்.

<u>வெள்ளைக்கு மருந்து:-</u>

எலுமிச்சம் பழம் ஆறு நல்ல எண்ணெ அரைக்கால் படி, கடுகு கால் படி இவை மூன்றையும் அரைத்து கலக்கி சாப்பிடவும். பத்தியம் ஏழு நால் கடும் பத்தியம்.

<u>வெள்ளைக்கு குலைக்கு:-</u>

வால் மிளகு .வ, பலம் தேன் விட்டு அரைத்து காலை மாலை இரு வேளையும் மூன்று நாள் சாப்பிட தீரும்.

<u>மாதவிடை ஆகாததுக்கு மருந்து.</u>

மாதவிடை ஆகாமல் வயிற்று வலி உண்டாகும். மலம் கட்டும். அதற்கு மருந்து. தண்ணீர் வற்றின தேங்காய் ஒன்று. அதை கண் திறந்து அதற்குள் ஒரு பிடி தா பதக்கை போட்டு எருக்கங் பாலும் கள்ளிப் பாலும் சம எடை கலந்து ஊத்தி கண் மூடி நெருப்பில் இட்டு எரித்து கருகாமல் எடுத்து அம்மியில் இட்டு அரைத்து அதாவது ஓட்டை நீக்கி அரைக்கவும். மைப் போல் அரைக்கவும். அரைத்துக் கொண்டு டப்பியில் வைத்துக் கொண்டு பெண் குளித்தது முதல் ஐந்து தினங்கள் கொட்டைப் பாக்கு அளவு கொடுக்கவும் கெற்ப ~~விப்புருதி தீரும். பேதி ஆகில் எளிர்த்த தண்ணீர் கொடுக்க நிற்கும்.~~

<u>ஒரு தலை வலிக்கு தைலம்:-</u>

நாலு ப்ழம் பச்சை கொடி வேலி பட்டையை சேர்த்து கத்தாழை சாத்தில் அரைத்து போட்டு ஒரு படி நல்ல எண்ணெயில் போட்டு காய்ச்சி வடித்து முழுக தீரும்.

<u>ஒரு தலை வலிக்கு:-</u>

ஒரு படி நல்ல எண்ணெயில் ~~அதிமதுரம்~~ அதிமதுரம், சுக்கு, வசம்பு வகைக்கு பலம்.2 இடித்து போட்டு பழுக்கக் காய்ச்சி வடித்து முழுகி வர தீரும்.

<u>ஒரு தலை வலிக்கு:-</u> நல்ல எண்ணெ படி ஒன்று, எருக்கம் பழுப்பு சார் படி அரைக்கால் சுக்கு, இந்துப்பு, ~~அதிமதுரம்~~ அதிமதுரம், வசம்பு, திப்பிலி மூலம், வெள்ளுள்ளி வகைக்கு பலம்

நாலை இடித்து போட்டு காய்ச்சி முழுகி வர தீரும்.

நல்லெண்ணெய், பசும் நெய், வெற்றிலை சார், எலுமிச்சம் பழம் சார், வகைக்கு படி ஒன்று, கருஞ்சீரகம் படி கால் பொடித்து போட்டு பழுக்க காய்ச்சி வடித்து முழுகி வர தீரும்.

ஒரு தலை வலிக்கு மருந்து:

ஒரு தலை வலிக்கு காதில் பிழிந்தாலும் சரி. நைவேளை வேரும் வெள்ளை பூண்டும் வைத்து தட்டி சாற்றை காதில் பிழிய தீரும்.

தடர் வெற்றிலையும், பெருங்காயமும் ஒர் நிரையாய் தட்டி கொஞ்சம் அடுப்பில் சூடு காண்பித்து காதில் பிழியத் தீரும்.

ஒரு தலை வலிக்கு மூக்கில் பிழிய மருந்து:-

ஈருள்ளியும், முருங்கையிலையும் வைத்து தட்டி துணியில் பொடி கட்டி கொண் இடது பக்கம் வலித்தால் வலது பக்கம் பிழியவும். வலது பக்கம் வலித்தால் இடது பக்கம் பிழியவும் தீரும்.

ஒரு தலைவலிக்கு மூக்கில் திரிபிடிக்க:-

அரிதாரம், எருக்கம் வேர் ஒரு நிரையாய் எலுமிச்சம் பழச் சார் விட்டு அ த்து துணியில் கடலி திரி உருட்டி புகை பிடிக்க தீரும்.

க்கு பத்து: எலுமிச்சம் பழ சார் பிழிந்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி ஒரு நிரையாய் அரைத்து நெற்றியிலும் உச்சியிலும் போட தீரும்.

அரையாப்பு, பிளவை, குலை, வீக்கம், குலைகட்டு, பவுத்திரத்துக்கு மேல் பூச:-

கடுக்காய், சுக்கு, கரியவளம், நாவி கிழங்கு, அபின், கொடிவேலி, வாளம், எருக்கன் வேர் இவைகளை எருக்கன் பாலிலாவது எருக்கு பழுப்பு சா றிலாவது அரைத்து பூச தீரும்.

அரையாப்பு அமுங்க பத்து:-

கரிய ளம், கருசீரகம், அபின், பெருங்காயம், நாவி கிழங்கு, வெள்ளுள்ளி கொடிவேலி வேர், இவைகளைக் கொடி கள்ளியால் அரைத்து பூச வற்றும். தீரும்.

அரையாப்புக்கு பத்து:-

இரம், கெந்தகம், நாவிகிழங்கு, அபின், பெருங்காயம் இவைகளை திருகு கள்ளி பாலில் அரைத்து பூச தீரும்.

அரையாப்பு வந்து ஆண் குறியிலும் புண் வீக்கத்திற்கு மருந்து

ஆண் குறியில் தடவ ஆதளைப் பா க் தடவி அலரி பூவை கசக்கி வைத்து கட்ட புண் ஆறி வீக்கம் வற்றும். தீரும்.

தடர், நாவி கிழங்கு, இலிங்கம், அரிதாரம், குக்கில் கரியவளம், அபின் பெருங்காயம் இவைகளை எருக்கன் பாலிலாவது எருக்கன் பழுப்பிலாவது அரைத்து பூச தீரும்.

அக்கி மருந்து:-

ஊமத்தம் இலையை அரைத்து எருமை வெண்ணெயில் மெழுகித்து தடவ தீரும். அமு மம். சகல ரணங்களுக்கும் -பிளாஸ்திரி:-

வெள்ள குங்கிலியத்தையும் வெள்ள மெழுகையும் ஒரு நிரையாய் சட்டியில்

இட்டு உருக்கும் போது தேன் காய் என்ணை ஊத்தி காய்ச்சி தண்ணீரில் ஊத்தவும். அது மிதக்கும். அதை எடுத்து டப்பியில் வைத்துக் கொண்டு துணியில் பூசி நெருப்பில் சூடு காட்டி புண்ணுக்கு போட ஆறும்.

சகல ரணங்களுக்கும் புண் ஆற :-

வெள்ளை குங்கிலியம் பலம்.5, ரசகற்பூரம் விருகன் எடை.5, தேங்காய் எண்ணை விட்டு அரைத்துக் கொண்டு அப்பால் தண்ணீர் விட்டு அரைத்துக் கொடுக்க வந்தால் குழம்பு போல் ஆகும். எடுத்து வைத்துக் கொண்டு புண்ணுக்கு போட ஆறும். தீரும்.

ஆறாத ரணங்களுக்கு களிம்பு :-

ரசம் விருகனெடை.க, கெந்தகம் விருகனெடை.க, மிருதார் சிங்கு நச்சிரகம் வகைக்கு விருகனெடை.உ, கருஞ்சீரகம் விருகன் எடை.6, துத்தம் விருகனெடை முக்கால் இவைகளை வெண்ணெயில் மெழுகு போல் அரைத்து பூச ஆறும். சிரங்குக்கும் பூசலாம். ஆறும்.

தீராத சிரங்குக்கு மருந்து :-

தேங்காய் எண்ணெயும் கால் படி வெள்ள மெழுகு பத்துருபாய் எடை போட்டு உருக்கி கொண்டு அதில் ரசகற்பூரம் துருசு, மிருதார் சிங்கு இவைகளை சம எடையாய் இடித்து சூலி கிண்டி கொண்டு வந்து நல்ல விதமாய் காய்ச்சி இறக்கி கொண்டு தடவி வர தீராத சிரங்கும் தீரும்.

ஆறாத ரணங்களுக்கும் புண்ணுகளுக்கும் களிம்பு :-

நல்லெண்ணெய் படி,வ, இரண்டு விருகனெடை தேன் மெழுகு போட்டு உருக்கி அதில் வெள்ளை குங்கிலியம் விருகன் எடை.க, மிருதார் சிங்கு விருகனெடை ஒன்றேகால் துருசு விராகனெடை அரை இவைகளை வெவ்வேற பொடித்து சூலி கிண்டி அம்மியில் இட்டு தண்ணீர் விட்டு அரைத்து நாலு ஆறு தடவை கழுவி எடுத்து வைத்துக் கொண்டு துணியில் தடவி புண்களில் போட ஆறாத புண்ணும் ஆறும்.

ஆறாத புண்ணுக்கு மேல் பத்து ஆடு தின்ற பாளையை கொண்டு வந்து அரைத்து புண்ணில் தடவி மூநாள் கழுவவும் எந்த புண்ணும் ஆறிவிடும்.

கண்டமாலை, பவுத்திரம், விப்புருதி விக்கம் படைப்பு, தெடைவாழை அரையாப்பு முதலியவற்றுக்கு மருந்து :-

எருக்கன் வேர் பட்டை, அவுரி வேர் பட்டை, வெந்தோன்றிக் கிழங்கு, குன்றுமணி பருப்பு, காஞ்சிரை விதை, தலைசுருளி வேர், கஞ்சா இலை, வசம்பு, பெருங்காயம் இவைகளை ஒரு நிரையாய் எடுத்து தூள் பண்ணி கொண்டு அதாவது வெள்ள பூண்டு தயிலத்தில் போட்டு நல்ல விதம் மெழுகு பதமாய் அரைத்து எடுத்து வைத்துக் கொண்டு எல்லாந் வற்றிக்கும் பூசவும்.

அகஸ்தியர் குழம்பு செய்யும் விதம் :-

பெருங்காயம், கடுகு, இந்துப்பு, ரசம், வெங்காரம், மனோசிலை, அரிதாரம், நேர்வாளம், ஓமம், கருஞ்சீரகம், இந்த பத்து சாமான் மட்டும் அதில் நேர் வாளத்தை மட்டும் தோல் உடைக்காமல் அப்படியே இருக்கவும். அப்படி என்றால் வருத்தது பாதி வருக்காதது பாதியாக இறக்கி தோல் மூலை நாவு இவைகளை நீக்கி விட்டு அதற்கு பின் ஒவ்வொரு சாமானும் ஒன்றேகால் ருபாய் எடை நிறுத்தி அம்மியில் போட்டு அரைக்கவும். அரைத்து கூட்ட கூடிய மோரும் சாதமும் சாப்பிட்டு அரைக்கவும்.

கோலாங் கட்டி சுத்தி.

கோலாங் கட்டி சுத்தி:- காந்த சுத்தி கரிப்பாலை சார், வெள்ளாட்டு (மையத்தில் 40 தடவை சுத்தி செய்யவும். சுத்தி செய்து இடித்து தூள் பண்ணி கொ கருப்பு கட்டியில் சேர்த்து கொடுக்கவும். இதில் தீரும் வியாதி சூலை முடக்கு வாய் வாய்வு கட்டியான், குருவிக்கம், காமாலை இன்னும் சில வியாதியும் தீரும்.

மேகம் 21-க்கும் மருந்து. கெருடன் கிழங்கு என்னெய்:-

கெருடன் கிழங்கு பலம்.12, வெங்காயம் பலம்.12, வாய் விளங்கம் பலம் 12, வாலுவை அரிசி, பலம்.1, சுக்கு பலம்.1, திப்பிலி பலம்.1, மிளகு பலம் மிளகு பலம்.1, சீரகம் பலம்.1, வகைக்கு பலம்.1, போட்டு விளக்கெண்ணெய் போட்டு காய்ச்சவும். 40 நாளில் தீரும். ஒரு கரண்டி சாப்பிடவும். பத்தியம் கரப்பான் பதார்த்தம் ஆகாது.

பெரும்பாட்டுக்கு நெய்:-

நாவாப்பட்டையை இடித்து ஒரு சட்டியில் போட்டு நாலு படி சலம் விட்டு அரை படியாக வற்ற வைத்து ஒரு மண் சட்டியில் ஊத்தி அதில் ஏலம், லவுங்கப் பட கடுக்காபூவு, காட்டாத்தி பூவு, காசிகட்டி, மரமஞ்சள், சீரகம், சிறுநாகப்பூவு, அதிமோதிரம், கோஷ்டம், விளாம்பிசின், வகைக்கு பலம் அரை.

அபின் தோலா முக்கால் இவைகளை இடித்து மேல் படி சாத்தில் ஊத்தி கலக்கி அதில் பசுவின் நெய் படி ஒன்று விட்டு காய்ச்சி வைத்துக் கொண்டு காலை மாலை களச்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும்.

மேக நீர்க்கு என்னெய்:-

வெள்ள அருகம் வேர், ஆடுதீண்டாப்பாளை வேர், கருநொச்சி வேர், காட்டு மு கை வேர், கீழ்வாய் நெல்லி வேர், வெலி தாமரை வேர், சாதிக்காய், சாதி பத்திரி, கோரோசனம், கருப்பு குன்றுமணி பூவு இவை எல்லாம் எலுமிச்சம் பழ சா தில் அரைத்து இருவிடாரி சாற்றியில் புடம் போடவும்.

ஆறாத புண்ணுக்கு மருந்து:-

முற்றிய வேப்பம் மரத்தை அடியோடு வெட்டி இருக்கும் இடம் பார்த்து அதில் முளைத்து வந்து இருக்கும் வேப்பம் சிறு குச்சியை ஒடித்து கொண்டு வந்து உ ஆறாத புண்களுக்கு பச்சிலை, ஆறாத புண்ணுக்கு காளி இலையை அரைத்து தடவவும் அரைத்து கட்டவும் உடன் ஆறும். பிரம்மதண்டு அல்லது எருக்குப் பால் செடி அல்லது ஆனை கருகு செடி என்று சொல்ல கூடிய செடி ஆக இம்மூன்றும் ஒரு செடிக்கு தான் சொல்லுகிறது. அதை அரைத்து புண்களுக்கு கட்டலாம். உடலே ஆறும்.

இன்ன ஒரு முறை.

ஆடு தின்னாப் பாளை என்னும் இலையை கொண்டு வந்து அரைத்து வைத்து கட்டினும் புண் உடனே ஆறிவிடும். இது கை கண்டது.

கண்டமாலைக்கு மருந்து.

சொரி தவளையை கொண்டு வந்து கையும் காலையும் நறுக்கி விட்டு இரண்டா பிளந்து புண்ணில் வைத்து கட்டவும். காலையில் கட்டி மத்தியானத்தில் அவிழ்த்து விட்டு மறுபடியும் வேறு தவளையை வைத்து கட்டவும். இப்படி மூன்று கட்டு கட்டிய பின் அவிழ்த்து விட்டு மறு கட்டு மாதேவி தழையை கட்டி மூன்று கட்டு கட்டவும்.

தேவி தலை அகப்படாத பச்சத்தில் ஆடு தின்னாப் பாளையை வைத்து கட்டவும். மூன்று கட்டு கட்டிய பின் மஞ்சளை அரைத்து மூன்று கட்டுக் கட்டவும். அதற்குப் பின் ஆடு தின்னாப் பாளையை இடித்த சார் கால் படியும் விளக்கெண்ணை கால் படியும் சமமாய் கலந்து காய்ச்சி வைத்துக் கொண்டு துவர் சிலை போடவும் ஆறிவிடும்.

கால் சுளுக்கு நரம்பு சுளுக்கு இவைகளுக்கு மலைபாம்பு கொழுப்பு தடவினாலும் விளாகும். அல்லது மீன் எண்ணை தடவினாலும் நிற்கும். விலகும்.

<u>பெரும்பாடுக்கு அதாவது ஆதக்கம் அதிகமாய் போதல்</u>

அத்தி பிஞ்சு இடித்த அரைக்கால் படி சார் வெங்காயமும் சீரகமும் இரண்டும் சேர்த்து இடித்த அரைக்கால் படி சாரும் அதில் ஆள் தரம் பார்த்து சாராயம் ஒரு கிரும். சாராயம் முதல் அரை கிரும். சாரும் விட்டுக் கொடுக்கவும் நிற்கும்.

<u>அற்புத ஜாலம்.</u>

புலி கொழுப்பு, கிலை பால், ஆடுபால் இம் மூன்றையும் சேர்த்து சமனெடையாய் வைத்துக் கொண்டு ஒரு மனி தன் சிரேகத்தில் தடவி விட்டால் குழகம் எங்கும் வீங்கி விடும்.

<u>மாத்தம் இறக்குவது.</u>

பன்னீர் கொண்டு சந்தனத்தை அரைத்து மேனில் பூசி உள்ளுக்கும் கொடுக்க வீத்தம் கொலையும்.

not useful to be deleted

சு.ச. 29.11

****

Verification completed on 15-2-1963

- 4 -

(4)

24.11.62.

வெள்வங்க குரு செய்யும் முறை.

வெள்வங்கம் பலம்.8, சூதம் பலம்.8, வெள்ளை பாஷாணம் பலம்.16, இவைகளை உமிழ் நீரால் அரைத்து ஆரவைத்து எடுத்துக் கொள்ளவும். ரவியில் காய வைக்கவும். சுத்தி வெள்ளியை வேண்டியதை எடுத்து வெள்ளி அளவுக்கு மேல்கண்ட அரைத்து குருவை போட்டு உருக்க சுத்த வெள்ளி குருவாகும். இந்த குருவை எடுத்து சுத்தி செய்த செம்பை எடுத்து செம்பு 10 மடங்கு எடுத்து குருவு ஒரு மடங்கு போட்டு உருக்க செம்பு வெள்ளியாகும்.

இந்த வெள்ளியில் சாரக் கட்டு போட்டு உருக்க தங்கமாகும்.

க.. எண்ணெயில் செம்பு சுத்தியாகிறது. இந்த சுத்தி நல்ல சுத்தியாக தெரிகிறது.

செம்பு, இரும்பு, பித்தளை இவைகளை சீக்கிரம் உருக வேண்டுமதனால் கண்ணாடியை தூள் செய்து உருகும் போது போட சீக்கிரம் உருகும்.

சாரத்திற்கு புடம் 20 எரு.

சத்ரு	மித்ரு	
கல்லுப்பு	கெந்தி	பலம்.1
இந்துப்பு	மனோசிலை	" 1
காரீயம்	தாரம்	" 1
அண்டம்	வீரம்	" 1
சுக்கான்	லிங்கம்	" 1
அபிரகம்	வெங்காரம்	" 1
	வெடியுப்பு	" 1
	கௌரி	" 1
	நாகம்	" 1
	காரீயம்	" 1

not useful for pharmacopoeia

மித்ரு சரக்கை அரைத்து 3 பாகம் செய்து 3 தடவைபுடம் போட நலம். சத்ரு சரக்கை தூள் செய்து ஒரு பாண்டத்தில் தூள் கொஞ்சம் பரப்பி அதன் மே சாரக் கட்டி வைத்து அதன் மேல் தூள் போட்டு மூடி சீலை மண் செய்து குடியடங் கட்டி பின் எடுத்து மித்ரு சரக்கை எல்லாம் எடுத்து உமிழ் நீரால் அரைத்து புடம் கட்டிய சாரத்திற்கு கவசம் செய்து ஆர வைத்து ஒட்டு கவசத்திற்குள் வைத்து சீலை மண் செய்து புடம் போட சாரம் கட்டி குருவாகும். இந்த குருவை முன் சொல்லி வெள்ளியில் கொடுக்கவும்.

கருவங்கம் செந்தூரம் செய்யு முறை.

பசு சாணியிலும் உருக்கி சாய்க்க சுத்தி. கருவங்கம் பலம் 5 எடுத்து பசும் கோமயத்தில் 20 தடவை சுத்தி செய்து உருக்கி சாய்க்கவும். வங்கத்தை ஒரு புது சட்டியில் போட்டு அபின் கழஞ்சி 4 வெடியுப்பு க படி $\frac{1}{4}$ எடுத்து சிறுக சிறுக போட்டு வறுக்கவும். ஆவாரவேரும் வட்டத் துத்தி வேரும் கண்ட துண்டமாக நறுக்கி போட்டு நாலு சாமம் வறுக்க செந்தூரமாம்.

அநுபான முறை:- ஒரு கடி நற்சீரகம், ஒரு கடி சீனி, ஒரு கடி பசு வெண் ணெய் இவைகளை சூரணம் செய்து வெண்ணை சேர்த்து குழப்பி செந்தூரம் கொடுக்கவும்.

ரும் வியாதிகள்: சன்னி 18, சகை அடைப்பு 18, உள் ரோகம் 326, பித்தம் 128, மம்புருக்கி, கால் எரிவு, சுக்கில பிரமியம்18-ம், சலக் கழிச்சல், தாகம், ர்கடுப்பு, உள்ருருக்கி, முகம் எரிவு, கை எரிவு. முதலியன.

இஞ்சி சாத்தில் ½பணவெடை செந்தூரம் கொடுக்க மேற்கண்ட வியாதி தீரும். அஷ்டாங்க சூரணத்தில் 1 பணவெடை கொடுக்க 1 கடி சூரணத்தில் கிராணி 5, மிற்றக் கடுப்பு, அதிசாரம்12, பிள்ளை பெற்றதில் வயிறு புழுத்த சீய் விழுகிறதும் தீரும்.

சுக்கு, திப்பிலி, மிளகு வறுத்து பொடி பண்ணி தேன் சேர்த்து குழப்பி இதில் பணவெடை கொடுக்க வரக்காமாலை, பாண்டுரோகம், பாரிச்சியம், விஷபாகம், மலிழுப்பு, ஈளை இருமல் முதலியன தீரும்.

கழுதை தும்மை சமூலம் கருப்பு செத்திலை ஒரு கவுளியும் உரலில் போட்டு இடித்து சாறு படி கால் வெள்ளியத்தில் டில் இலைகள் மூடி போல் கை செய்து சட்டியில் ப்பு போட்டு குகை கழுத்தளவும் உப்பு அரைத்து சட்டியில் வைத்து 3 கல் வைத்து டுப்பு வைத்து 2 விறகு கொண்டு சன்னமாய் எரித்து ஈய குகை விராகனிடை 4-ல் சம் விராகனிடை 4 விட்டு முன் சாறு சுருக்கு கொடுக்க உருண்டு சட்டியை பிடித்திருக்கும். தை உடைத்து எடுத்துக் கொள்ளவும். மாற்று மட்டமாயிருந்தால் மேற்கண்ட சாற்றில் போல் குகை செய்து சுருக்கு கொடுக்கவும்.

காட்டுப் பசலை வெள்ளியம் உருக்கு முகத்தில் கொடுக்கவும். இப்படி 2 தடவை சய்யவும் நீர் வாங்கும்.

இண்டன் வேர் பட்டைக் கொண்டு வந்து இடித்து தாளகத்திற்கு கீழும் மேலும் வைத்து கீழோடு மேலோடு மூடி சீலை மண் செய்து கெசப்புடம் போடவும். பற்பமாம். த பிரகாரம் முன் பட்டையை கவசமிட்டு புடம் போட் பற்பம். இந்த பற்பத்தை தழைச் சாறு விட்டு அரைத்து முன்பு தரசம் கெசபுடம் போடவும். சந்தூரமாகும். தாம்பிரம் உருக்கு முகத்தில் வீசம் பணவெடை செந்தூரம் கொடுக்க ர்ணமாம்.

ஜாதிப்பூ செடி வேர் பட்டைக் கொண்டு வந்து பசுவின் பாலில் அரைத்து தட்டுக்கு ஒசம் கொடுத்து தட்டு மேல் வைத்து மூடி கெசப்புடம் போடவும் பற்பமாம். த பற்பம் தாம்பிரம் உருக்கு முகத்தில் கொடுக்க நல் ருய் சொர்ணமாம் ஜாதிப் பூ செடி - ஜாதி மல்லிகை செடி அல்லது காட்டு மல்லிகை செடி.)

சுத்தி செய்த கருநாபி, லிங்கம், வீரம், பூரம், கெந்தகம் வகைக்கு ½ ரூபாயெடை த்து வெள்ளக் கருவு விட்டு அரைத்து கோழி முட்டை ஓட்டில் அடைத்து சீல் செய்து ஜ ருமரத்துப் பட்டை தேங்காய் அளவு அரைத்து அதற்கு மேல் அப்பி சீலை மண் ய்து 15 எரு முட்டையில் புடம் போட உருக்கி கட்டி விடும். அதை தூள் செய்து த்துக் கொண்டு வியாதிக்கு தகுந்த அநுபானத்தில் 1, 2 அரிசியெடை கொடுத்தால் த ரோகங்கள், சிலேத்மங்கள் சுவாச க்ஷயங்கள் கண்டிக்கும்.

<u>தாளக பற்பம்.</u>

1 பலம் தாளகம் 5 பலம் பனிக் கட்டியில் போட்டு நீர் சுண்டிய பிறகு பெரிய இடிதரிக்காய்குள் வைத்து சீலை மண் செய்து 15 விரட்டி புடம் போடவும் பற்பமாய் பசும்.

லிங்க பற்பம்.

குமரிக்குள் வைத்து 3 எருவில் புடம் வைக்கவும். மேகம், செம்மேகம், கரிமேகம் படைகள் செவ்வட்டை கைகால் குறைந்த ரோகங்களுக்கு கை கண்டது.

மணிப்புங்கன் பட்டை, அருகன் வேர், நீரடிமுத்து வகைக்கு வீசை.1, இவைகளை வெளித் தைலம் இறக்கி 2 தம்பிடி எடை கேழ்வரகு மாவில் கொடுக்கவும். காலை, மாலை 10,20 நாள். இச்சா பத்தியம்.

துஷ்ட வியாதிக்கு மருந்து.

அமுக்கிரா இலை ரசம் ஆழாக்கு.1, பச்சை மஞ்சள் சாறு ஆழாக்கு .1, தேன் ஆழாக்கு .1, இம்மூன்றையும் சீசாவில் சாடியில் போட்டு வெயிலில் வைத்துக் கொண்டு வரவும். இவை கண்டி கிருதம் போல் வருமளவும் வெயிலிலே வைத்து தேனைப் போலிருந்தால் எடுத்து வேளைக்கு 1 கரண்டி வீதம் 3 நாள் கொடுக்கவும். இச்சா பத்தியம். மருந்தை சாப்பிட்ட பின் அமுக்கிராப் பட்டை 2½ பலம் இடித்து கஷாயம் விட்டு பருந்து 2 வேளை சாப்பிடவும். கை கண்டது.

குஷ்டத்திற்கு கெந்தக பற்பம்.

கெந்தகம் பலம்.1, நல்லெண்ணெய் பலம்.10, வெள்ளை வெங்காயம் பலம்.5 இவை மூன்றையும் ஓர் எண்ணை பழகின பாத்திரத்தில் போட்டு தீயில் வைத்து வெங்காயம் வேகிற வரையில் வைத்து வெந்த பிறகு இறக்கி கொள்ளவும். மேற்கண்ட கெந்தகத்தை 5 பாகமாக்கி பச்சை வெள்ளறுகை அரைத்து சின்ன எலுமிச்சங்காய் அளவு இருக்க வேண்டியது. அதில் கெந்தகத்தை வைத்து வியாதியஸ்தனை விழுங்கச் செய்யவும். எண்ணெயை தேக முழுதும் பூசச் செய்யவும். கை கண்டது.

வெள்ளைக்கு இன்னும் மற்ற வியாதிகளுக்கு துஷ்ட மருந்து.

வேப்பம் மரத்து பட்டையை இடித்து தூளாக்கி (பச்சையாகவே) பங்காளா வாழைப்பழம் சேர்த்து போட்டு இடிக்க சாறு. இது இரத்தம் போல் இறங்கும். அதில் சமார் 2 அவுன்ஸ் கொடுத்து நல்ல சாப்பாடு சாப்பிடவும். பதி தீபனம் உண்டு.

சகல மேகத்திற்கு எண்ணெய்.

ஆமணக்கெண்ணெய், தேங்காய் சிரட்டை படி.1, தும்மட்டிகாய் 5, பூவரசங் காய் சாறு படி.3/4, கருசலாங் கண்ணி சாறு படி.3/4, பொன்னாங்கண்ணி சாறு படி.3/4, குப்பைமேனிச் சாறு படி:3/4, புங்கன் வேர் பால் படி.3/4, இவைகளை விட்டு சிரட்டியில் காய்ச்சி பதமாய் இறக்கி மெல்லிய சாணி கடலி ரவியில் காய வைத்து எடுத்து கேழ்வரகு பானையில் 1 மாதம் வைத்து தேக்கரண்டி அளவு 5 நாள் சாப்பிட சகல மேகமும் தீரும். இச்சா பத்தியம். கை கண்டது.

சாரக் கட்டு.

படிகாரம் பலம்.1, சோற்றுப்பு பலம்.1, அப்பளாகாரம் பலம்.1, மூன்றும் பொடித்து ஒரு பலம் சாரத்திற்கு கீழ் மேல் ஒரு சட்டியில் போட்டு ½மணி நேரம் சிறு தீ எரித்து 2 மணி நேரம் பெரும் தீ எரிக்கக் கட்டும்.

நவாச்சாரம்1-க்கு ஆமையோடு தூள்(அ) ஆட்டு எலும்புத் தூள் பலம்1½.

கீழ் மேல் வைக்கவும். முருங்கையிலை அரைத்து மசை செய்து கவசமிட்டு 3 சீலை செய்து 20 எருவ புடமிட்டு கட்டும்.

நீலத் துருசை கவுதம்பை ரசத்தில் ஊர வைத்து அந்த ரசத்தை விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து கவுதம்பை இலையை அரைத்து கவசம் பண்ணி சீலை மண் செய்து புடம் போட்டு இப்படி 2 புடம் பிறகு கருஊமத்தையிலை ரசத்தில் அரைத்து வில்லை தட்டி காயவைத்து 2 புடம் இப்படி செய்து எல்லா வியாதிக்கும் கொடுக்கலாம்.

கெருடக்கிழங்கு எண்ணெய்.

செய்முறை:- மை போலிடித்து நிழலில் உலர்த்தின கருடன் கிழங்கு பலம்.12, வாய்விளங்கம், வாலுளுவை யரிசி, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம் வகைக்கு பலம்.1, வெங்காயம் பலம்.12, சித்தாமணக்கெண்ணை படி.½, இவை யாவும் ஒன்று சேர்த்து பதமாக காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

பிரமாணம்: சிறு கரண்டி அளவு நல்முக பேதியாகும். பேதி அதிகமானால் மறு நாள் எண்ணையை குறைக்கவும். 5, 10, 20, 48 நாள் ஒரு மண்டலம் ஆற விட்டு கீழ் சொல்லிய படி ஸ்நானம் செய்து சாப்பிட வேண்டியது.

ஆழ்ந்த வியாதிக்கு 48 நாள், சொல்ப வியாதிக்கு 5, 7 நாட்கள் போதும்.

தீரும் வியாதி: கிரந்தி, குஷ்டம், கரிமேகம், வெள்ளை, அரையாப்பு, மேகரணம், மேகவூரல், வெடிப்பு, புழு வெட்டு, மலக்கட்டு, வயிற்றெரிச்சல், வாதரோகம் ஆசனரணம் முதலியன போம்.

பத்தியம்: சிறு பயறு, சம்பா சாதம்.

ஸ்நானம்: வெட்டி வேர், வில்வ பழம், சதாப்பு, வகைக்கு பலம்.1, கோஷ்டம், அருகன் வேர், பூலாக் கிழங்கு, சீந்தில், சடாமாஞ்சில், கற்கடக சிங்கி, நெல்லி வத்தல், சீரகம், கண்டு பரங்கி, வகைக்கு காசு எடை.1, சந்தன தூள் பலம்.2, சிறுதேக்கு பலம்.¼, நல்லெண்ணெய் படி.½, சீனுகற்கண்டு விராகன்.1, இவையாவும் ஒன்று சேர்த்து பதமாய் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.

மேல் மருந்து சாப்பிட்டு ஸ்நானத்திற்கு இதை தேய்த்து சீயக்காய் வெந்நீரில் ஸ்நானம் செய்து தலைரை ஆட்டிறைச்சி கூட்டவும்.

சுத்தி செய்த தாளகத்தை கழுதை மலத்தில் பொதிந்து ரூட்டில் செய்து புடமிட பற்பம்.

வெள்ளை பத்ராக்ஷி இலை அரைத்து தாளகத்துக்கு கவசம் செய்து புடமிட பற்பம்.

வாலை ரசம் 3 பாகம் தங்கத்தை கெந்தக ரேக்கு 5 பாகம் வாங்கி வெள்ளை காக்கட்டான் மூலிகையில் ரசம் எடுத்து அந்த ரசம் விட்டு 2 சாமம் அரைத்து வில்லை கட்டி காயவைத்து கோழிபுடம் இப்படி முன் சாற்றில் 3 புடம் போட்டு எடுத்து பார்க்க பற்பம். அந்த பற்பத்தை காசரோகிகளுக்கு மற்றும் எல்லா வியாதிகாரருக்கும் கொடுக்கவும். இந்த முறை ராசிபுரம் பழனி பண்டாரம் அவர்கள் கையாண்டு வந்த முறை.

லிங்க-வாலை ரசம் 3 பாகம் கெந்தக ரேக்கு 5 பாகம் ஈதம் சேர்க்கவும்.

நீரடைப்பு சதையடைப்புக்கு:- சாரம் பலம்.1, வெடியுப்பு பலம்.1, இரண்டையும் பொடி செய்து ஒரு குடுவையில் போட்டு 4, 5 விரட்டியில் புடமிட கட்டும். எடுத்து பொடி செய்து உபயோகப்படுத்தவும்.

25.11.62.

வெள்ளி கன்னம்.

வெள்ளி பலம்.1, எடுத்து கழுதை மூத்திரத்தில் 20 தரம் காய வைத்து தோய்க்க வெள்ளி வெட்டையாய் விடும். அதை எடுத்து புளிப்பு, மாதளம் பழத்தில் அரைத்து 20 விரட்டியில் புடமிடவும். இதுபோல் 3 தடவை மேல்கண்ட ரசத்தில் அரைத்து புடமிடவும் சுன்னமாகும். சகல மேகங்களும் போகும்.

காக்கை விரலைப் போல் உள்ள பச்சிலையில் தாம்பிரம் சுன்னமாகிறது.

பீனிசத் தைலம். கை கண்டது.

சவுரிப் பழம்.4,5. பசும் பால் படி.½, நல்லெண்ணெய் படி.¼, வெள்ளை மிளகு பலம்.1, அபினி விருகள்.1, இதை காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்ய பீனிசம் நிவர்த்தியாகும். புளி நித்திரை நீக்கவும்.

விரைவாதத்திற்கு எண்ணெய்.

நல்லெண்ணெய் பலம்.5, கழற்சி பருப்பு பலம்.2, எருக்கம் பூ பலம்.1, நிலப் பனை கிழங்கு பலம்.½, சித்திரமூல வேர் பலம்.½, முடக்கத்தான் சாறு பலம்.½, பச்சை கற்பூரம் விராகன்.¼ இவைகளை பக்குவப்படி காய்ச்சி வடித்து கரண்டி வீதம் 3,5,7 நாள் சாப்பிட விரைவாதம் முதலிய சகல வாதமும் தீரும். இச்சா பத்தியம்.

சார நீர்.

புளியம் சாம்பலை ஜலம் விட்டு காய்ச்சி உப்பை எடுத்து மேனிச் சாறு விட்டு அரைத்து குகை செய்து அதில் சாரம் வைத்து சில்விட்டு சீலை செய்து குக்குடம் புடமிட நீராம்.

விரை வாதத்திற்கு.

பூண்டு பல்.½, மிளகு பலம்.¼, கழற்சி சமூலம் பலம்.2, இம்மூன்றும் அரைத்து ஒரு பலம் சிந்தாமணக்கு எண்ணெயில் வேக வைத்து கிளறி மூன்று பாகம் செய்து 3 நாள் சாப்பிட விரை வீக்கம் தடிப்பு நோய் நீங்கும். இச்சா பத்தியம். கை கண்டது.

தங்க பற்பம் முறை.

பத்தரை ரேக்கை வாங்கி வந்து வெள்ளை காக்கட்டான் இலை ரசத்தில் அரைத்து 3 தடவை புடம் போட பற்பம்.

அரைப்பு - 3 சாமம், கெசப்புடம்.

எல்லா வியாதிகளும் தீரும்.

அய்யா ஆக்க கூடிய முறை.

வன்னி மரத்து பட்டை நடுவில் இருக்க கூடிய பட்டையை எடுத்து வைத்துக் கொண்டு பிற்பாடு சோற்றுக்கு போடக் கூடிய உப்பை நல்ல தண்ணீரில் கரைத்து அடுப்பில் வைத்து காய்ச்சி கொஞ்சம் ஆறவைக்க கட்டியாகி விடும். அந்த உப்பின் நடுவில் சீரிபழைய சிங்கக் காசை நடுவில் வைத்து உப்புக்கு கீழும் மேலும் வன்னி மரத்து பட்டையை வைத்து கெசப்புடம் போட அது 7½ மாற்று அசலாகும். அந்த காசை எடுத்து குத்தியிலையை கொண்டு வந்து அந்த காசின் மேல் தேய்க்க சுத்த பத்தரை மாற்று அசல் தங்கம் ஆகும்.

வாக செம்பு மஞ்சளாயிருக்கும். ...கில் நல்ல வெள்ளி ...ளாய் போகும்.
வாக செம்பு - செம்பு கொட்டி, பாம்பே பார் வெள்ளி - நல்ல வெள்ளி.

கொல்லு நாகம்	ரு 0-6-0	எடை
நற்செம்பு	ரு 0-2-6	"
நல்ல வெள்ளி	ரு 0-3-0	"
வாக செம்பு	ரு 0-4.6	"
ஊ தகாரம்	...அணு	எடை.

முதலில் கொல்லு நாகம் வைத்து உருக்கி கன் விட்டு ஆடும் போது ஊ தகாரம் கொஞ்சம் போட்டு தெளியவும். அதே ...கையில் நற்செம்பு போட்டு உருக்கி கன் விட்டு ஆடும் போது ஊ தகாரம் கொஞ்சம் போட்டு தெளியவும். அதே ...கையில் நல்ல வெள்ளி ...ட போட்டு உருக்கி கன் விட்டு ஆடும் போது ஊ தகாரம் போட்டு தெளியவும். அதே குகையில் வாச செம்பு போட்டு உருக்கி கன் விட்டு ஆடும் போது ஊ தகாரம் போட்டு உருக்கி தெளிய விட்டு 5 நிமிஷம் சென்ற தண்ணீர் விட மஞ்சளாயிருக்கும். அது கிமியாவாகும். ஊ தகாரம் பச்சையாயிருக்கும். புளிப்பு, கைப்பு கிடையாது.

ரோக நிர்ணய சாரம்

விளம்பிகா அஜீரணம் வியாதியின் குணம்

கபவாதத்தால் உண்டாகி வயிற்றில் கல்போல் கனத்து நாள்பட அதிக வேதனை செய்யும். இதற்கு மருந்து பிராண ரச்சாமிர்த சிந்தில் சொல்லியபடி லவண பற்பம். அஜீரண கண்டக ரசி மாத்திரைச. சண்முக சூரணம். ராஜமார்த்தாண்ட லேகியம்.

ஓயர் வெள்ளை பிங்கான் கொண்டு வந்து இடித்து வஸ்திர காயம் செய்து பிறகு கல்வத்தில் நேக அரைத்து 2 சாமம் பிறகு கோழி முட்டை வெள்ளைக் கருவு விட்டு 2 சாமம் அரைத்து கரு கட்டிக் கொள்ளவும். அதில் வார்க்க பாலீஸ் உடன் இருக்கும்.

கடுக்காய் கொண்டு வந்து இடித்து ஊரப் போட்ட தண்ணீரில் மேல் கண்டவைகளை போட பழைய நாணயமாகி விடும்.

<u>சூதமுனி தட்டு முறை.</u>

சூதத்தை சுத்தி செய்து சூரிய காந்தி பூ இதழை கசக்கி ரசம் எடுத்து அதில் சூதம் விட்டு மிஸ்ரம் செய்து எடுக்க வெண்ணையாகும். அதன் பிறகு மிளகாய் சத்தை த...யை கசக்கி மேல்கண்ட வெண்ணையையும் மேற்கண்ட மிளகாய் சத்தையும் மிஸ்ரம் செய்து எடுக்க மணியாகும். இந்த மணி பசுவின் முதுகில் வைக்க பால் கறக்காது.

<u>ரூபாயின் எடை பாகம்.</u>

1941-ல் போட்ட ரூபாயிடை	$3\frac{1}{4}$	விராகன்
1945-ல் போட்ட ரூபாயிடை	$3\frac{1}{4}$	விராகன்
1940-ல் போட்ட ரூபாயிடை	$3\frac{1}{4}$	விராகன்
1947-ல் போட்ட கால் ரூபாயிடை	$\frac{13}{16}$	விராகன்
1943-ல் போட்ட சதுர இரண்டு அணாயிடை		விராகன்
ஒரு அணா யிடை		விராகன்

<u>அண்ட வாயுவுக்கு.</u>

வெள்ளாட்டு பித்தம் சீரகமும் சேர்த்து நேக அரைத்து பற்று போட வலி நீங்கும்.

நாளக பற்பம் கவுதம்பை இலையிலும் கள்ளிச் சாம்பலிலும் பற்பமாகும்.

சாரத்தை நாள் செய்து வேலிக்கு பொரித்து வைத்துக் கொண்டு அல்லது சுண்ணம் செய்து கொண்டு வெள்ளி ஈயத்தில் போட்டு உருக்க சுத்தமாகவும் நீர் வாங்கி வெள்ளியாகும்.

தாம்பிர சுத்தி.

காட்டுக் கொட்டை பாலில் 7 தரம் உருக்கி சாய்க்கவும். கரு நொச்சி சாற்றில் 7 தரம். இலை கத்தாளையில் 7 தரம். இப்படி சுத்தி செய்த தாம்பிரம் கிரியாவுக்கு முடியும்.

படிக்காரம், வெடியுப்பு கல்லுப்பு சாரம் இவைசமன் எடுத்து சுண்ணம்பு 4 பாகம் சேர்த்து எலுமிச்சம் பழ ரசம் சேர்த்து அரைத்து காசுக்கு *சைநட்டுக்கு முறிவு. புளி கலசம் செய்து புடம் போட செம்பு சுத்தியாகும்.

* சைநட்டு என்பது சுத்தமான வெள்ளை பாஷாணம்.

****

சு.ச:26.11.

Verification completed on 16-2-63

- 5 -

26.11.62.

1. செம்பை உருக்கிப் புளிப் பிரண்டை, புளிமஞ்சி, உப்பு தண்ணீர், மோர்காடி, இந்த வகையில்ஒவ்வொன்றுக்கு 3 தரம் உருக்கி சாய்க்க. களிம்பு அறும். அதன் பின் களிம்பற்ற செம்பை எடுத்து கின்னம் பண்ணி நாலு விராகன் பொன் அரிதாரமும் போட்டு கின்னியை தாலத்திலே அழுத்தி வச்சிர மெழுகு சுற்றிலும் பூசி தண்ணீர் வார்த்து அடுப்பில் வைத்து எரியிட கின்னி கனக நிறமாம்.

2. வச்சிர மெழுகு.

மலைத்தேன் மெழு, இருப்பு கரண்டியில் போட்டு உருக்கி வெங்கலப் பொடி விராகன்.10, மிருதார சிங்கு விராகன்.5, ரசம் விராகன்.5, நீலாஞ்சனம் விராகன்.1, இதுவெல்லாம் ஒன்றிடு காரச் சட்டியில்கடப் போட்டு ஒரு கரண்டி இலுப்பை நெய் வார்த்து குளி தோண்டி எருபோட்டு நடுவை வைத் தீ போட்டு தொண்ணூறு நாழிகை வேக வைத்து எடுத்தால் செந்தூரம். இது தம்பை மலர் போலிருக்கும். 10 பலம் செம்பில் 10 பணவெடை செந்தூரம் போட்டு உருக்க 7 மாற்று தங்கம்.

3. ரசக் குளிகை.

கருந்தக் கனி சாறு நாளி சட்டியிலிட்டு ரசம் விட்டு தீபாக்கினியாய் ஒரு சாமம் எரிக்க ஆற வைக்க இருகும். இது தம்பனக் குளிகை நந்தி கெஉசப் பான காரத்து லட்சிப்பரர்.

4. 8 பணவெடை செம்பு, 4 பணவெடை வெள்ளி, 6 பணவெடை அரிதாரம், 3 பணவெடை துத்த நாகம் கட்டி அறிதியிலை விழுமியிலை, மனனியிலை கட்டுக் கொடியிலை துவைத்து சாறு விட்டு 8 தரம் உருக்க 7 மாற்றுகும்.

5. வெள்ளீயம் விராகன்.2-க்கு 1 விராகனிடை தாளகம். தாளகத்தை எலுமிச்சப் சாறு விட்டு அரைத்து ஈயத் தகட்டில் தடவி 20 விரட்டியில் புடமிட பற்பம். இந்த குரு ½ பணவெடை ஒரு விராகனிடை ரசத்தில் போட்டு ஒரு எருவில் குளி பறித்து அதில் ரசமிட்டு குரு போட்டு மேலே ஒரு எரு முருச்சி அடிக்கி நெருப்புப் போட வெந்த பிறகு எடுக்க குளிகையாம். இது கை கண்டது.

6. இரசம் 10 விராகனுக்கு பாசாணம் 1 விராகன் பொடி செய்து வைத்துக் கொண்டு குப்பை மேனி ஒரு பிடி சுத்தன் குரும்பை ஒரு பிடி இந்த இரண்டையும் அரைத்து கொண்டு குண்டு சட்டி நடுவில் வைத்து நாலு விரல் அளவு குளி பறித்து அந்த பாசாணம் பொடியைத் தூவி நடுவே ரசம் விட்டு அதின் மேலே சீலை மண் செய்து அது மேலே பொடி தூவி அதன் மேலே ரசம் விட்டு இப்படி3 அடுக்கு அடிக்கி வைத்து சர்வமுங் கொண்டு மூடி கவிழ்த்து அந்த சாறு வார்த்து இரண்டு சீலை மாணம் செய்து அது மேலே குண்டு சட்டி கொண்டு மூடி அந்தப்படி மாணம் செய்து அடுப்பில் வைத்து ஒரு விறகு கொண்டு கமலாக்கினியாக எரிக்கவும். இதுக்கு பதம் சட்டி தூர் மேலே சாணி வழிந்து அது மேலே நெல்லு வைக்கவும். நெல்லு பொரிஞ்சால் அசையாமல் இறக்கி வைத்து குளிர விட்டு திறந்து பார்க்க மீன் சிலாம்பு போலிருக்கும். அதை எடுத்து மூட்டகரியில் வைத்து உருக்கவும். மணியாய் திரமும். அதை எடுத்து நீட்ட கம்பி வாங்கவும் ஆகும்.

7. பிக்கலை கழிம்பர.

எலுமிச்சம் பழச் சாற்றில் மூன்று நாள் கடுக்காய் சாற்றில் 3 நாள் தயிரில் 3 நாள் ஊரப் போட்டு எடுக்க கழிம்பரும்.

மருதாணி தைலத்தில் களிம்பற்ற பித்தளையை குகையிலிட்டு மூடி சீலை மண் செய்து மேலும் ஒரு வறட்டி புடமிட சுவர்னம்.

8. லிங்கக் கட்டு.

சாதிலிங்கக் கட்டியை எடுத்து வெங்காயத்தை துளைத்து அதில் கட்டியை வைத்து அந்த வெங்காயத்தை கத்தாளை மடலுக்குள் வைத்து சீலை மண் செய்து (Incomplete)

முன் பக்கத்தில் கண்ட மருந்திற்கு கம்பு சாதம், மோர் சாதம் சேர்த்து சாப்பிடவும்.

பெண்கள் வெள்ளைக்கு தேத்தாங் கொட்டை தூளை பால் (அல்) தண்ணீரில் கொடுக்கலாம்.

கெண்டைக் கால்கடுவனுக்கு சோற்றுப்பு படி 1/4 வெடியுப்பு 1 பலம், விழுதி காந்தி 1 பிடி, மஞ்சள் தூள் 2 பலம்

செய் முறை: இம் மூன்றையும் நன்றாய் அரைத்து 1 படி தேங்காய் எண்ணெயில் [illegible] போட்டு கடுகு பதமாய் காய்ச்சி 3 நாள் பூசவும். 15 நிமிஷம் எரிச்சலுண்டாகும்.

தீரும் வியாதி: கெண்டைக் காலில் குருவை போல் இருந்து நீராய் வடிந்தால் அதற்கு பூசவும். கால் வெடிப்பு, மேகப் புண் போகும்.

பொன் அரிதாரம், கெந்தி சிலைமூன்றும் சமன்எடை நல்லெண்ணை 1 படிக்கு மேல் கண்ட மருந்து 1 பலம்.

செய்முறை:- இம்மூன்று சரக்குகளை நேக அரைத்து மேல் கண்ட எண்ணையில் கலக்கி பூச செம்மேகம் வட்டம், கடுவன் படை முதலிய வியாதி தீரும்.

லிங்க மெழுகு.

சோற்றுக் கற்றாளைப் பாலெடுத்து சோற்றுப்பை கல்வத்திலிட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து ஒரு பாண்டத்தில் வெத்திலை பரப்பி அதன் மேல் வில்லையை வைத்து மேலும் வெத்திலையை பரப்பி மேல் கவசம் செய்து சிறு தீயாக ஆறு சாமம் எரித்து எடுத்து அரைத்து பனியில் வைக்க ஜெயநீர். அந்தஜெய நீரில் லிங்கக் கட்டிக்கு சுருக்கு கொடுக்கும் போது ஊசி கொண்டு குத்த இறங்கினால் அப்புறம் தங்க ரேக்கு எடுத்து அந்த மெழுகுக்கு மேற்கண்ட ரேக்கை கவசம் செய்து மேற்கண்ட ஜெயநீரால் சுருக்குக் கொடுக்க ரேக்கை மெழுகு இழுத்துக் கொள்ளும். பின்பு எடுத்து வெள்ளி 10-க்கு மெழுகு ஒன்று கொடுக்க சுத்தம்.

முலைவள சாஸ்திரத்தில் மஞ்சள்பூ, தைவேளை ரசத்தில் ரசவேகையாகும்.

பெண்கள் உதிரத்திற்கு சிலாசத்து பற்பம் 1ரூபாயெடை படிக்கார பற்பம் 1 ரூபாயெடை ஆவாரம் மொக்கு அரிசி 1ரூபாயெடை, உதியம் பட்டை ரசம் கிரவை ரசம் இரண்டும் சேர்ந்து 1/8 படி எருமை தயிரில் கொடுக்க உதிரம் உடனே நிற்கும்.

நீலத் துருசு பலம் 1, முசுமுசுக்கை சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து அகலில் வைத்து சீலை மண் செய்து 2 விரட்டியில் காற்று இல்லா விடத்தில் புடமிட்டு எடுக்க சுன்னம்.

மேல்கண்ட சுன்னத்தின் எடைக்கு வீரம் சேர்த்து வெண் கரு விட்டு அரைத்து பில்லை செய்து அகலில் வைத்து சீல் செய்து 2 விராட்டியில் புடம் அல்லது வாட்டவும்.

சுன்னம் செம்பு பத்துக்கு மருந்து ஒன்று கொடுக்க வயது 8½ எல்லா ரோகத்திற்கும் வியாதி அறிந்து வயதுக்கு தக்கபடி கொடுக்கலாம். அளவு 1 குன்று மணி.

சூதண்டம் தளையை எடுத்து அரைத்து உருண்டை செய்து அதன் மத்தியில் வெடியுப்பை தூள் செய்து போட்டு மேலே மூடி சீலை மண் செய்து 25 விராட்டியில் புடமிட உருகி கட்டும்.

சாரம் வேண்டியது எடுத்து அகத்தி கீரை அரைத்து கவசம் செய்து சீலைமண் செய்து 25 விராட்டியில் புடமிட கட்டும்.

மருந்து கொடுக்க.

வெள்ளை பாசானம் 1 தோலா வெள்ளெருக்கன் பால் விட்டு அரைத்து மாத்திரை செய்து வெயிலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு தோலா சருகை வெள்ளியில் டப்பி 2 செய்து அதனுள் மரத்தி களை போட்டு டப்பி மூடி வெள்ளிக் கம்பியால் டப்பியை கட்டி சீலை மண் 7 செய்து உணர்த்தி 25 விரட்டியில் புடமிட மருந்து உருகி வெட்டையாகும். வெள்ளி 1 தோலா செம்பு 2 தோலா உருக்கி மருந்து 2 அணாயிடை போட வர்ணிக்கும்.

10 அணா எடை சரக்கும் 6 அணாயிடை மேல் கண்ட லோகம் கொடுக்க வயது 8½.

தாம்பிர பற்பம்.

நேர்வாளம் ½ பலம் சேராங் கொட்டை 2 இவைகளை இடித்து மெழுகு செய்து சிம்ம காசுக்கு கவசம் செய்து அகலில் வைத்து சீலை மண் 7 செய்து 50 விரட்டியில் புடமிட வெள்ளை நிறமான தாம்பிர பற்பம்

அநுபானம்: தேன் வெண்ணை

3 நாள் மருந்து ஆனகால் அளவு அரிசியெடை ஒரு நாள் விட்டு ஒரு நாள் போஜனம் ராஜ போஜனம்.

விளக்கெண்ணை தீபம்.

லிங்க ரசம் எடுத்து நிலா அவரை ரசம் விட்டு 11 நாள் வைத்து எடுத்து அரைக்க வெண்ணை. அதை வில்லை தட்டி காய வைத்து மணலில் வாட்ட முதலில் தீ பாக்கினியாக எரிக்க செந்தூரம்.

வெள்ளியில் 10-க்கு 1 குரு.

~~1/16~~ படி எலுமிச்சம் பழ ரசத்தில் பலம் சாரம் பவுடர் செய்து போட்டு கலக்கி மேல்கண்ட வெண்ணையில் தீபாக்கினியாய் எரிக்க மணி இருகும்.

வெங்காரத்தை எடுத்து எலுமிச்சம் ரசம் விட்டு அரைத்து பிளேட்டில் கடுங்காரம் ஏறும் வரையில் வைத்து எடுத்து சீசாவில் போட்டு தாம்பிர உருக்கு முகத்தில் கொடுக்க சீக்கிரம் உருகும்.

தாம்பிர சுத்தி: மேனி ரசத்தில் 12 தடவை பொற்றலை கையானில் 12 தடவை.

பனங்குருத்தவிடைய பஞ்சு பலம். 1, அல்லது 1 பிடி முலைபால் விட்டு மெழுகு பதமாய் அரைத்து உருண்டை செய்து மத்தி பத்தில் சிங்கக் காசு வைத்து மூடி 50 விராட்டியில் புடமிட வர்ணம் அல்லது ரசம் காளகம் இம்மாதிரி செய்யவும்.

தாம்பிர பற்பம்.

சோற்றப்பை வேண்டியது எடுத்து நாயுருவி ரசம் விட்டு அரைத்து வில்லை

சய்து அகலில் வைத்து 50 விரட்டியில் புடமிட சுண்ணம். சுண்ணம் எடைக்கு வெங்காரம் சேர்த்து ஊத கடுஞ் சுண்ணம். அச்சுண்ணத்தை சிம்மக் காசில் உருக்கி உருக்கு முகத்தில் ண்ணம் கொடுக்க பற்பம்.

வெள்ளைப் பூண்டை அரைத்து மொந்தை செய்து அதற்குள் கொடி பவளத்தைக் வைத்து 7 சீலை மண் செய்து 50 விரட்டியில் புடமிட பற்பம்.

அளவு : 1 குன்றி.

அநுபானம்: தேன் வெண்ணை

தீரும் நோய் க்ஷய ரோகம்.

தாளகத்தை 1 பலம் எடுத்து சுண்ணாம்பிலல் தாளித்து எடுத்து தெளிவு நீரில் அரைத்து தெளிவு படித்தி இப்படி 5 தடவை செய்து எடுத்து வெங்காரம் 2 பலம் சேர்த்து எருக் ன் பழுப்பு ரசத்தில் அரைத்து வெயிலில் வைத்து மறுபடி அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ரக்கவும் செந்தூரம்.

சிங்கக் காசுகளை எடுத்து மேனி ரசத்தில் 21 தடவை சாய்க்க சுத்தி. காசு டைக்கு வீரம் ஒரு எடை. பூரம் ஒரு எடை. புடம் வைக்கும் போது ஒரு காசு எடை தான் வைக்க வேண்டும் தில்லைப் பாலில்.

செம்பு சுத்தி ஜெயநீர்.

மதியுப்பு, சீனம் உவருப்பு இது மூன்றும் ஜெய நீர். வெடியுப்பு பேரண்டம் மன் எடுத்து ஜெயநீர் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து விராக புடமிட பற் ம். செம்பு எடைக்கு பாகி பற்பம் எடுத்து உருக்கு முகத்தில் கொடுக்க சுத்தி.

அபிரகச் செந்தூரம்.

கோபுரந்தாங்கி நெய் சட்டி தாள் கொத்தமல்லி இலை இலைகளை அரைக்க சந்தூரம்.

சகல ரோகங்களுக்கும் வெள்ளி செம்பிலும் கொடுக்க முறை.

திரவாக முறை.

கெந்தி பலம்.10, தாளகம் பலம்.5, கல்லுப்பு பலம்.2½, சாரம் பலம் ½ இதுகளை தூள் செய்து திராவகம் இறக்கி கொள்ளவும்.

ரசம் விராகன்.10, சொர்ணம் விராகன்.2½ ரசத்தை அயச் சட்டியில் வைத்து தி நெருப்பில்வைத்துக் கொண்டு பரி கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்து திரவகம் சிறுக சிறுக கொடுத்து வருக்கவும் செந்தூரம். அச் செந்தூரம் மேல் போக்கு

பூநீர், சுண்ணம்பு சாரம் இம்மூன்றும் சமனிடை ஜெயநீர்.

மந்தார காசத்திற்கு துத்தி தழையை வேவித்து இருக்க தண்ணீரில் பால் சேர்த்து ாப்பிட மந்தார காசம் உடனே நிற்கும்.

பாண்டு, வீக்கத்திற்கு, ஏரளிச்சி வேர் காட்டுக் கொட்டை வேர் முருங்கைப் ட்டை கஷாயம் கொடுக்க நிவர்த்தி.

காசம் முறை.

2 பலம், சுக்கு எடுத்து பட்டை சீவிப் போட்டு உப்பை குப்ப மேனி சாற ட்டு அரைத்து மேல் கண்ட சுக்குக்கு லேபனம் மொந்தை போல் செய்து மேல் சீலை ன் அல்லது வெறுமனாக நெருப்பில் போட்டு பதமாய் எடுத்து 1 பலம் சுக்கு சேர் கருப்பட்டி 2 திராம் சாராயத்தில் போட்டு கர்ச்சி பதமாய் எடுத்து

வைத்துக் கொண்டு 1 கழச்சிக் காய் அளவு கொடுக்கவும். not useful

27.11.62.

2-ம் முறை.

கசகசா ¼ பலம், வால் மிளகு ¼ பலம், லவங்கப் பட்டை ¼ பலம், லவங்கப் பூ ¼ பலம், நல்ல மிளகு ¼ பலம், இந்த ஐந்து வகையும் பொன் நிறமாய் தனித் தனியே வறுத்து தனித் தனியாய் அரைத் ஒன்றாக சேர்த்து வைத்துக் கொண்டு 1 விராகனிடை உள்ளங் கையில் ~~[illegible]~~ தேன் விட்டு சாப்பிடவும்.

வெள்ளைக்கு.

கல்மதம், கல்நார், புல்மதம், நிலப்பனைக் கிழங்கு சமனிடை எடுத்து கரிசலாங் கண்ணி சாற்றில் அரைத்து புடம் போட்டு இளநீரிலாவது கம்மங் சாதம் தண்ணீரிலாவது இலவம் பட்டை சாற்றிலாவது கொடுக்க நீர் கடுப்பு, நீர் சுருக்கு, நீர் எரிச்சல், நீங்கும். கல்மதம் கல்நார் இவைகளை குமரியில்வைக்கவும்.

வெள்ளை பெரும்பாட்டுக்கு.

எருக்கன் கொழுந்து, ஆவரன் கொழுந்து, வெப்பன் கொழுந்து வெள்ளைப் பூலா கொழுந்து அரைத்து பாலிலும் தயிரிலும் 3 நாள் 6 வேளை கொடுக்கவும். இச்சா பத்தியம். புகையிலை காரம் நீக்கல்.

செம்முள்ளி தண்டையுடைத்து அதில் பச்சை அமுக்கி அதற்குள் சுத்தி செய்த ரசம் வைத்து மேலும் பச்சை அடைத்து ஏழு சீலை மண் செய்து 8 விரட்டியில் புடமிட கம்பி போலிருக்கும்.

பெரு வயிறு மகோதரம் வீக்கம் இவைகளுக்கு.

பனை வெல்லத்தைகரைத்த தரையில் தெளித்து ஈக்கள் பிடித்து அரைத்து கொட்டை பாக்களவு ~~காலை மாலை 3 நாள் [illegible]~~ காலைமாலை 3 நாள் பனை வெல்லத்தில் கொடுக்க நிர்வர்த்தி பத்தியம். இச்சா பத்தியம்.

வாந்திக்கு:- சந்தனக் கட்டை தாளை நெருப்பில் போட்டு புகையை பிடிக்க வாந்தி நிற்கும்.

மந்தார காசத்திற்கு.

மிளகு, சுக்கு, திப்பிலி, பெருங்காயம், சித்தரத்தை சமன் எடை வஸ்திர காயம் செய்து பாட்டில் வைத்துக் கொண்டு சித்தரத்தை கசாயத்தில் பணவிடை மேல் கண்ட தாள் போட்டு கொடுத்து வெள்ளைக் குங்கிலிய புகை காட்ட நிற்கும்.

துருசு சுண்ணம்:- வெண் துருசு:-

துருசு பலம். 4, கெந்தி பலம். 2, இவைகளை அறுகை செயநீரில் விட்டு அரைத்து வில்லை தட்ட காய வைத்து 40 விராட்டியில் புடமிட சுண்ணம். இரு மிருந்தால் மறுபடியும் செயநீர் விட்டு அரைத்து வில்லை செய்து மறுபடியும் புடமிட சுண்ணம். வியாதி போக்கும்.

நீல துருசு சுத்தி.

பழம் புளியை கரைத்து அதில் நீல துருசை 2 நாள் ஊர வைக்கவும். பின் கிளத்து பூண்டு சரத்தில் ஊர வைத்து 2 நாள் சென்று வேறு ரசம் எடுத்து அதில் இருக்கு கொடுக்கு கழுவி எடுத்து உலர்த்தி துருசு 4 பலம் கெந்தி 2 பலம் போட்டு அறுகை ஜெய நீர் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து 7 சீலை மண்

சய்து 30 எருவில் புடமிட்ட சுண்ணம் வியாதி போக்கும்.

காரியத்திற்கு

சத்துரு		மித்துரு
அயக்காந்தம்	கெந்தி	பூ நாகம்
திமிஊ	கற்சுண்ணம்	மயூரச் செம்பு
கிளிஞ்சி	அபிரகம்	நாகம்
அண்டம்	வெடியுப்பு	செம்பு
நண்டு	கல்லுப்பு	வெள்ளீயம்
நத்தை	கல்நார்	வெள்ளி
கௌரி	சாதிலிங்க பேதி.	சூதம்

மென்லஸ் வித்து இலைகளிக்கு.

அடுக்கு செம்பரத்தை பூவை எடுத்து காலை மாலை நான்கு பக்களாக நாள் சாப்பிட சுகம்.

செவன் சீஸ் காட்லிவர் ஆயிலை வாங்கி கால் அவுன்சுக்கும் பச்சை வாதத்திற்கும் தய்த்து சூரிய புடத்திலிருக்கிற தண்ணீரை வார்க்கவும். இப்படி 15 நாள் சுகம்.

மணி, துளசி, விராலி இலை ஒரு பலம் இலை அரைத்து காசுக்கு கவசம் செய்து புடமிட வர்ணம்.

கீரி நாயக ரசத்தில் செம்பை உருக்கி 7 தடவை சாய்க்க கிரியா

வெள் கரு ஜெயநீர்.

பூ நீரும் வீரம் காரம் இம்மூன்றும் சேர்ந்து சுண்ணம் செய்து போட ஜெயநீர்.

வெடியுப்பு, சீனம், சாரம் இம்மூன்றும் சேர்ந்த சுண்ணம் ஜெயநீர்.

பூ நீரில் எண்ணெய் எடுக்க முறை.

ஒரு பிளேட்டில் பூ நீர் போட்டு அதில் திருகு கள்ளிப் பாலில் 7 நாள் அல்லது 4 நாள் ஊர வைத்து பாவனை செய்து அதே போல் விட்டு அரைத்து வில்லை தட்டி ல் செய்து காய்ந்த பின் கஜபுடமிட சுண்ணம்.

சூதம் சங்கை எடுத்து நொறுக்கி மேல் கண்ட பாலில் ஊரவைத்து முன் போல் அரை வில்லை தட்டி காய்ந்த பின் புடமிட சுண்ணம்.

கடல் நுரை எடுத்து நொறுக்கி முன் கண்ட பாலில் ஊர வைத்து எடுத்து அரைத்து வில்லை தட்டி காய வைத்து புடமிட சுண்ணம். இந்த மூன்று சுண்ணம் சேர்ந்தால் உப்பு ஆகிறது.

திருகு கள்ளிப் பாலில் மேல் கண்ட சுண்ணம் போட ஜெயநீர். அந்த ஜெயநீரில் ஓடும் சரக்குகளை தோலாந்திரம் கட்டி எரிக்க கட்டும்.

தருசு எடுத்து முன் போல் பாலில் ஊரப் போட்டு முன் போல் ஜெயநீரில் தோலாந்திரம் எரித்து முன் ஜெயநீரில் அரைத்து வில்லை தட்டி மக்குட மிட சுண்ணம். இச் சுண்ணத்தை வெள் கருவில் போட ஜெயநீர்.

இதே போல் தாளகம், கௌரி, 64 சரக்கும்

திருகு கள்ளி மரத்தை 2 முழம் விட்டு அறுத்து துளைத்து ரசத்தை சுத்தி செய்து க்கட்டையில் போட்டு மேல் கட்டை கொண்டு மூடி 48 நாள் சென்று எடுத்து அடியில் றுத்து அக்கட்டையை பெரிய புடமிட இருகி கட்டும்.

குகை முறை.

பேரண்டத்தை எடுத்து தூள் செய்து திருகு கள்ளிப் பாலில் ஊற வைத்து அதே போல் விட்டு அரைத்து வில்லை தட்டி புடமிட சுன்னம். அச்சுன்னத்தை எடுத்து அதே பால் விட்டு அரைத்து குகை செய்து காய வைத்து அதில் எச்சரக்கையும் முன் கண்ட சரக்குகளை வைத்து அதே மூடி செய்து சீலை மண் செய்து புடமிட சுன்னம்.

வெள்ளைப் பாசாணத்தை திருகு கள்ளிப் பாலில் 7 நாள் ஊற வைத்து அதன் பின் முன் ஜெய நீரில் தோலாந்திரம் கட்டி எரித்து முன் குகையில் வைத்து புடமிட சுன்னம். சுன்னத்திற்கு சமம் ரசம் சேர்த்து அதே பால் விட்டு அரைத்து குக்குட மிட சுன்னம். இச் சுன்னம் வெள்ளங்கம் நீர் வாங்கும்.

நண்டு ஓடு, சிப்பி ஓடு, ஆமை ஓடு, நத்தை ஓடு கோழி முட்டை ஓடு சமன் எடை முன் பாலில் ஊறப் போட்டு அதே பால் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து புடமிட சுன்னம். அதே சுன்னத்தை பால் விட்டு அரைத்து குகை செய்து காய வைத்து முன் சரக்குகளையும் இதில் புடமிட சுன்னம்

பெண்கள் வெள்ளைக்கு.

படிக்கார பற்பமும், வெள்ளை குங்கிலியமும் சமன் சேர்த்து வஸ்திர காயம் செய்து வெண்ணையில் சாப்பிட நிவர்த்தி.

எல்லா சுரங்களுக்கும்:- சுத்தி செய்த பூரம் 1 பலம், வெள்ளெருக்கம் பட்டை 3 பலம் பட்டை பச்சையா யிருக்க வேண்டும். இவை இரண்டும் நேக அரைத்து உளுந்து பிரமாணம் மாத்திரை செய்து அனுபானம் சுக்கில் கஷாயம் செய்து பெரியவர்களுக்கு 2 மாத்திரை, 10 வயது பிள்ளைக்கு 1 மாத்திரை கொடுக்கவும். பத்தியமில்லை.

பூநீர் பலம்.1, வெடியுப்பு பலம்.2, இரண்டையும் அரைக்க மெழுகு ஆகும். இதை கம்பி போல் செய்து சம தட்டம் மண்ணில் செய்து கரி நெருப்பில் புரட்டி பிரட்டி வாட்ட நெருப்புக்கு உருகாது.

ஆகண்ட கன்றையை இடித்து மொந்தையில் பாதி போட்டு பள்ளம் செய்து அதில் வெடியுப்பு தூள் செய்து போட்டு மேலே இலை தூளை போட்டு கவசம் செய்து 7 சீலை மண் செய்து 25 அல்லது 30 விராட்டியில் புடமிட கட்டும்.

சோற்றுப்பு பலம்.1, பூநீர் பலம்.½, அரைத்து சிறு சிறு வில்லை செய்து ஓட்டில் வைத்து வாட்ட வாட்ட கட்டும். நெருப்பில் உருக்க மணியாகும்.

கம்பி நவாச்சாரம், அல்லது நாட்டு நவாச்சாரம் எடுத்து அகத்திக்கீரை அரைத்து இளநீர் உருண்டை பிரமாணம் செய்து மத்தியில் வைத்து 7 சீலை மண் செய்து 1000 விராட்டியில் புடமிட நவாச்சாரம் உருகி கட்டும். அது வாத்து முட்டை போல் உருகி இருக்கும். அதை இரண்டாக சிறு வாளால் அறுத்து கிண்ணி போல் செய்து அதில் ரசம் ஒரு பலம் விட்டு கரி நெருப்பில் ஊதவும். ரசம் கட்டும். வங்கம் நீர் இழுக்கும்.

வெள்ளை கல்யாண முருங்கை பூவின் ரசம் எடுத்து ஒரு பலம் கெந்தகத்தில் மேல் கண்ட ரசம் விட கந்தகம் மெழுகாகும்.

தாம்பிரத்தில் சிம்மக்கரி எடுத்து மெழுகை கிராசம் கொடுத்து புடமிட அல்லது உருக்க வர்ணம். வேகை பூர்த்தி

மூலவிஷ மிரட்டி.

~~1. நபிட் கேசடு 1 அவுன்ஸ், 2 ரசம். 1½பாலெடை. 3. தாம்பிரம் 1விராகன்~~

.தண்ணீர் 3 அவுன்ஸ் 1, 2, 3, இம்மூன்று லக்கமிட்ட வஸ்துகளை போட்டு கரைத்து பின் தண்ணீர் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தேள்கடி, சர்ப்ப விஷம், எலி விஷம், நாய் விஷம் எப்படி பட்ட விஷ ஜந்து கடித்த விடத்தில் ஒரு குச்சியில் பஞ்சு சுத்தி மேல் கண்ட மருந்தில் நனைத்து கடித்த இடத்தில் தடவவும்.

அரியரனார் வைத்தியர் முறை.

தாம்பிர குரு செடி, செடி குத்து செடி, உயரம் 1 முழம் குறைவு. நிறம் சிவப்பு. வட்டவம் சிறுயிலை. இச்செடியை இடித் தாம்பிரம் உருக்கு முகத்தில் கொடுக்க குரு வாகும். இது மலைகளில் இருக்கும்.

வட்டப் பத்திரி சிவப்பாயிருக்கும். மலைகளில் உண்டு.

பாலமுருகன் தைலம். நெ.2.

சர்வ மேக வாயுவலுள்ளும். முழங்கால், கைகால் மரிக்கட்டு, வீக்கம் பச்சை வாதம் தொவளை இவை கால் வெடிப்பு ஒரு தலை நோவுக்கு இரட்டை தலை இவைகளுக்கு

முன் நெ.1-ல் டருக்கப் பட்ட மருந்து 1 பாகம் தேங்காய் எண்ணெய் 7 பாகம் சேர்த்து நன்றாய் குலுக்கி மேலே நன்றாய் அழுத்தி தேய்க்கவும். சாயந்திரம் அரிசி கழுவிய நீரை எடுத்து சுடச் சுட கொதிக்க வைத்து துணியில் நனைத்து ஒத்தடம் கொடுக்கவும். காலையில் ஒரு வேளை தான் தைலம் பூச வேண்டும். குளிர் காற்று படக் கூடாது.

சோற்றுப்பு சுன்னம்.

சோற்றுப்பை எடுத்து கல் இச்சி மரத்தின் பட்டை சீவி உள் பட்டை எடுத்து இடித்து ஒரு மொந்தையில் இடித்த தூளைப் பரப்பி அதன் மேல் சோற்றுப்பை போட்டு அதன் மேல் பட்டை தூள் போட்டு மேல் கவசம் செய்து 50 விரட்டியில் புடமிட கட்டி சுன்னமாகும்.

பூநீர் சுன்னம்.

தீட்சையுப்பு வேண்டியதை எடுத்து வெள்ளை எருக்கன் காயை பிளந்து அதில் வைத்து 7 சீலை மண் செய்து 10 விரட்டியில் புடமிட கருஞ் சுன்னம். நாள்பட்ட வயிற்று வலி தீரும்.

தாம்பிர பற்பம்.

வெள்ளை பூக்கும் அரளி செடியின் வேரை நேக அரைத்து விளாங்காய் பருமன் சாந்தில் சுத்தி செய்த சிம்மக் காசை வைத்து 7 சீலைமண் செய்து 20 விரட்டியில் புடம் போட பற்பம். தீரும் நோய் குஷ்டம் அனைத்தும் போகும்.

பஞ்ச உப்பு விபம்:- இந்துப்பு, கரியுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, வளையலுப்பு

நவவுப்பு விபரம்:- வெடியுப்பு, கல்லுப்பு, இந்துப்பு, அப்லகாரம், சாற்றுப்பு, வளையலுப்பு, கரியுப்பு, சவுட்டுப்பு, நவச்சாரம்

உப்பு கட்டு முறை.

6 மணி நேரம் எரிப்பு. 1. கரியுப்பு, 2. வெடியுப்பு, 3. இந்துப்பு, 4. வெங்காரம். 5. வளையுப்பு, 6. நவச்சாரம். 7. பூநீர் இவைகள் சமன் எடை எடுத்து தூள் செய்து 6 மணி நேரம் எரிக்க சட்டி சிவக்க எரிக்க கட்டும். மேற்கண்ட கட்டை செம்பில் கொடுக்க ஜாதி மாறும். உமிழ் நீரில் கட்டை அரைத்து பூசவும்.

லவணங்களில்
பிரிதிவு: கல்லுப்பு இந்துப்பு வளையலுப்பு.
அப்பு 3 வித சாரம்.
தேய்வு சவுட்டுப்பு வெடியுப்பு சூடன்
வாய்வு: வெங்காரம், சீனம், சருசு,
ஆகாயம்: பூரம், வழலை
கல்லுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, சாரம் சவட்டுப்பு வெங்காரம், சீனம் இந்துப்பு

<u>நவவுப்பு விபரம்.</u>

கல்லுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, சூடன், வெங்காரம், சீனம், பூநீர், சாரம்.

வெடியுப்பு, கல்லுப்பு, சூடன், கடல்நுரை, சூதம், அன்னபேதி, வீரம். சாரம். வெங்காரம்

<u>உப்பு வகை எல்லாம் விந்து ஆண் சரக்கு.</u>

வெடியுப்பு, கல்லுப்பு, சூடன் கடல்நுரை, சூதம். காந்தம். இரும்பு, அன்ன பேதி. தொட்டிப் பாசாணம், மஞ்ச பேதி. வீரம். அபிரகம். கௌரி, வெள்ளைப் பாசாணம், வைக்கிராந்தம். [illegible] தங்கம். சாரம்.

<u>புளிப்பு வகை எல்லாம் சுரோணிதம் நாதம் பெண் சரக்கு.</u>

படிக்காரம், பழம்புளி, சருச, கற்சுண்ண நீர், கெந்தி. காடி, எரியலாம் எண்ணை, பொன்னம்பர், புளியரணை, புளி நரளை, கல்மதம், புளியாரை, காய்ந்த சருகு, புளி மாங்காய், பனங் கள்ளு, நிமளை, மரேசிலை வெங்காரம்; இந்துப்பு,

நாகம், இலிங்கம், செம்பு

ஆடுஞ் சரக்கு அதாவது உருகிய படி வெளும்பிப் போகுஞ் சரக்கு ஆடி நெருப்புக்கு நில்லாமல் லோடுஞ் சரக்கு.

சரக்கு 64, அவற்றில் தானே 9 9 சரக்கு தற்செயலாய் உண்டாவன.
வைப்பு 55 ல் செய்யப் பட்டன.
ஆண் சரக்கு உப்பு, விந்து வெடியுப்பு, கல்லுப்பு முதலியவைகள்.
பெண் சரக்கு: சுரோணிதம் படிக்காரம். பழம்புளி

27.11.62. சு.ச. ****

Verification completed 19.2.63

139